திருக்கோயில்



டிசம்பர் 2001

விலை
ரூபாய் ஐந்து

பழனி மலை சிவகிரி

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழ்	: ரூ. 5.00
ஆண்டு உறுப்பினர் கட்டணம்	: ரூ. 60.00
ஆயுள் உறுப்பினர் கட்டணம்	: ரூ. 500.00

மாலை 43	திருவள்ளுவர் ஆண்டு 2032	விசு - மார்கழி டிசம்பர் 2001	மணி 12

சிறப்பாசிரியர்

திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப.
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

திருத்தணி வள்ளி, தேவானை உடனுறை
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி

பொருளடக்கம்

சித்தர்பெருமான்கருவூர்த்தேவர்
- முனைவர் த. அமிர்தலிங்கம்

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்க!
திருமதி மீனாட்சி கோகுலவாசன்

தமிழகக் கோயில் திருவிழாக்கள் - எஸ். பாஸ்கர்

ஒன்றியிருந்து நினைமின்கள் - மயிலை சிவஞானஜோதி
சிவசக்தி அம்மையார்

ஆத்மாவை அறிந்தோர் யார்?
- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

ஈசனைப் பணிவார்க்கு இல்லை எமபயம்
- கவிஞர் ச.க. ஏகாம்பரம்

முருகனின் அவதாரங்கள் - டாக்டர் டி. செல்வராஜ்

மூர்த்தி, தலம், தீர்த்தம் - திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

தொன்மைக்கோலம் - சேது. சிவா.

சத்தியம் தவறாத உத்தமர் —
நம்பாடுவார் அருள்வரலாறு - புலவர் ஏ. பரந்தாமன்,
எம்.ஏ. பிஎட்.,

பக்தனுடன் பரந்தாமன் - எஸ். கோவிந்தராஜ பட்டாச்சாரியார்

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்
திருக்கோயில்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
தொலைபேசி : 8279407

சித்தர் பெருமான் கருவூர்த்தேவர்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

சித்தத்தை இறைவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள். திசைகளும், திசைகளின் முடிவுகளும் எட்டுமாறு நொடிப்பொழுதில் மனத்தின் விரைவினும் மிக விரைவாகச் சென்று ஓடி விளையாடி மீளவரும் ஆற்றல் படைத்தவர்கள் சித்தர்கள். உள்ளங்கையில் ஓர் உழுந்து அமிழும் அளவாக, ஆழமிக்க ஏழு கடலையும் சுருக்கி அதனைப் பருகிவிடும் ஆற்றல் படைத்தவர்கள் சித்தர்கள்.

தேவலோகத்தைக் கைக்குள் அடங்கும் ஒரு பந்தாக்கி விளையாடவல்ல சித்தர்களின் வியத்தகு ஆற்றலை பின்வரும் பாடலில் தாயுமான சுவாமிகள் எவ்வாறு போற்றி உரைக்கின்றார் பாருங்கள்!

''திக்கொடு திகந்தமும் மனவேகம் என்னவே
சென்றுஓடி ஆடி வருவீர்
செம்பொன்மக மேருவொடு குணமேரு என்னவே
திகழ்துருவம் அளவளாவி

உக்ரமிகு சக்ரதரன் என்னநிற் பீர்கையில்
உழுந்து அமிழும் ஆசமனமா
ஒரேழு கடலையும் பருகவல் லீர் இந்திரன்
உலகும் அயி ராவதமுமே

கைக்குளளிய பந்தா எடுத்து விளையாடுவீர்
ககனவட் டத்தை எல்லாம்
கடுகிடை இருத்தியே அஷ்டகுல வெற்பையும்
காட்டுவீர் மேலும் மேலும்

மிக்கசித் திகளெலாம் வல்லநீர் அடிமைமுன்
விளங்கவரு சித்திஇலீரோ
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர்கணமே''.

இத்தகைய சித்தர்களில் ஒருவராகத் திகழும் கருவூர்ச் சித்தர், போகசித்தரின் மாணாக்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் கொங்கு நாட்டில் சிறப்புற்றுத் திகழும் கருவூரில் பிறந்தவர். போகசித்தரிடம் உபதேசம் பெற்று ஞானநூல்கள் பல ஆராய்ந்து சிவயோகத்தில் நின்றவர். காயகற்பம் உண்டவர்; பலசித்திகள் கைவரப் பெற்று அற்புதங்கள் பலவற்றைச் செய்து காட்டியவர் ஆவார்.

வடநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு, நடுநாடு எனப் பல இடங்களிலும் உள்ள திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு, தென்பாண்டி நாட்டுத் தலங்களை இவர் தரிசிக்க சென்றபொழுது ஒரு அற்புதம் நடைபெற்றுள்ளது.

அப்பொழுது தாமிரபரணி நதிக் கரையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டு இருந்தது. அந்நதியினைக் கடக்க இயலாமல் மறுகரையில் திருக்கோயில் கொண்டு விளங்கும் நாறும்பூநாதப் பெருமானை வழிபட விழைந்து நதியின் ஒரு கரையில் இருந்தவாறே ''நாறும் பூநாதா'' என்று இவர் கூவி அழைக்க, நாறும்பூநாதர் இவரைத் திரும்பிப் பார்த்து ''வாரும்'' என அழைக்க, இவர் நதியினைக் கடந்து செல்லும் வகையில் நதியின் வெள்ளம் வடிந்து விட்டது. நதியினைக் கடந்து சென்று நாறும்பூநாதரை இவர் தரிசித்து நிற்க, இறைவர் இவருக்குத் திருவடி தீட்சையை வழங்கியுள்ளார்.

அடுத்து இவர் திக்கெலாம் புகழும் திருநெல்வேலி சென்று அருள்மிகு நெல்லையப்பரைத் தரிசிக்க சென்றபொழுதும் ஒரு அற்புதம் நிகழ்ந்துள்ளது. கருவூர்ச் சித்தரின் பெருமையைப் பாரினர் அறிந்து கொள்ளும் வகையில் ''நெல்லையப்பா'' என்று இவர் பலமுறை அழைத்தும், நெல்லையப்பர் இவருக்குக் காட்சி வழங்கவில்லை. இங்குக் கடவுள் இல்லை போலும் என்று கோபித்துக் கொண்ட கருவூர்த் தேவர், ''ஈசன் அங்கு, எருக்கு இங்கு'' என்று கூறி ஆலயத்தை விட்டு நீங்க ஆலயம் உடனே பாழ்பட்டு எருக்கங்காடு ஆகிவிட்டது.

நெல்லையப்பரே பிறகு கருவூர்த் தேவரைத் தேடிச் சென்று, மானூரில் அவருக்குத் தரிசனம் தந்து நெல்லையம்பதிக்கு மீளவும் அழைத்து வந்து திருக் காட்சி வழங்கியுள்ளார். ''செந்நெல் இங்கு, எருக்கு அங்கு'' என்று கருவூர்த் தேவர் கூற, மீண்டும் ஆலயம்

செழித்தோங்கியது. இவ்வரலாறும் ஈசருடைய இன் தோழர் நம் கருவூர்த் தேவர் என்பதை உணர்த்துகின்றது.

கருவூர்த் தேவர் திருக்குற்றாலம் சென்று திருக் குற்றாலநாதரைத் தரிசித்துப் பின் பொதிய மலை சென்று அகத்திய சித்தரைத் தரிசித்து ஆனந்தமாக அவருடன் சிவானந்தத்தில் திளைத்து இருந்தபொழுது, அவருடைய மகிமையை மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் மீண்டும் ஒரு அற்புத நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

தஞ்சையை ஆண்ட முதலாம் ராசராச சோழன், ''இராசஇராசேச்சரம்'' திருக்கோயிலை மிகப் பெரியதாக நிர்மாணித்து பெருவுடையார்க்கு அட்டபந்தன மருந்து சாத்தியபொழுது, அம்மருந்து இளகாமல் போகவே, அரசன் முதலானோர் அதுகண்டு வருந்தி நின்றனர். ''கருவூர்த் தேவர் வந்தால்தான் அட்டபந்தன மருந்து இளகும்'' என்று அசரீரி எழுந்தது. உடனே அங்கிருந்த போகசித்தர் காகம் ஒன்றின் கழுத்தில் தகவல் தெரிவித்த ஓலையைக் கட்டி, பொதிய மலையில் அகத்தியருடன் வீற்றிருந்த கருவூர்த் தேவரை வரவழைத்தார். கருவூர்த் தேவரும் விரைந்து தஞ்சைக்கு வந்து தம் குருவான போகசித்தரையும், இராசராசனையும் கண்டார். அனைவருடைய வேண்டுகோளின்படி அட்டபந்தன மருந்தை இறுகச் செய்து பெருவுடையாரை நிலைநிறுத்தினார்.

இத்தகைய அருளாளரான கருவூர்ச் சித்தர் திருவரங்கம் சென்று அரங்கநாதர் அருள் பெற்றுப் பின் தாம் பிறந்த திருவூரான கருவூர் சென்று, கருவூர்த் திருஆனிலை ஆலயம் அடைந்து பசுபதீசுவரரைத் தழுவிக் கொண்டார் என்பதாக அவருடைய வரலாறு அறியப்படுகின்றது.

சித்தரும் மிகச் சிறந்த அருளாளருமான கருவூர்த் தேவர், ஒன்பதாம் திருமுறையில் உள்ள திருவிசைப்பா திருப்பதிகங்களில் பத்துப் பதிகங்களை பாடியுள்ள பாவாணரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்பதாம் திருமுறையில் ஒன்பது அருளாளர்கள் பாடியுள்ள திருவிசைப்பா பதிகங்கள் இருபத்து எட்டு உள்ளன. அவற்றுள் நம் கருவூர்த் தேவர் மட்டும் மிக அதிக அளவில் பத்துத் திருப்பதிகங்களைப் பாடியிருப்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

(1) கோயில்
(2) திருக்களந்தை ஆதித்தேச்சரம்
(3) திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்
(4) முகத்தலை
(5) திரைலோக்கிய சுந்தரம்
(6) கங்கை கொண்ட சோளேச்சரம்
(7) திருப்பூவணம்
(8) திருச்சாட்டியக்குடி
(9) தஞ்சை இராசராசேச்சரம்
(10) திருவிடைமருதூர்

ஆகிய பத்து சிவத்தலங்களுக்கு ஒவ்வொரு திருப் பதிகமாகப் பத்து திருவிசைப்பாப் பதிகங்கள் பாடி, திருவிசைப்பா பாடிய ஆசிரியர்களுள் அதிகப் பதிகம் பாடியவர் என்ற பெருமைக்கும் உரியவராக நம் கருவூர்ச் சித்தர் திகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

திருவளர் திருச்சிற்றம்பலம் போற்றும் முதற் பதிகத்தில் தாயாகத் திகழ்ந்து நலம்புரிபவர் நடராசப் பெருமான் என்பதை உருக்கமாக எடுத்து இயம்புகின்றார் கருவூர்த் தேவர்.

''தாயின்நேர் இரங்கும் தலைவ ஓ என்றும்
தமியனேன் துணைவ ஓ என்றும்
நாயினேன் இருந்து புலம்பினால் இரங்கி
நலம்புரி பரமர்தம் கோயில்''
''கண்பனி அரும்பக் கைகள் மொட்டித்துஎன்
களைகணே ஓலம் என்று ஓலிட்டு
என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்து
என்னையும் புணர்ப்பவன் கோயில்''

என்று தில்லை திருச்சிற்றம்பலத்தைப் போற்றிப் புகழ்ந்துள்ளார் நம் கருவூர்த் தேவர்.

''திருநீறு பூசுதலை என் உடல் விரும்பும், செவி இறைவனின் திருப்புகழ் விரும்பும்'' என அப்பரின் ''திருஅங்கமாலை'' போன்ற ஒரு பாடலைக் கருவூர்த் தேவரும் பாடியுள்ள பாடல் காண்க.

''தெள்ளுநீ றவன்நீறு என்னுடல் விரும்பும்
செவிஅவன் அறிவுநூல் கேட்கும்
மெள்ளவே அவன்பேர் விளம்பும் வாய், கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்,
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய்க்கீழ்க் கோட்டூர்
வள்ளலே! மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனே என்னும்என் மனனே.''

சிவபெருமானைப் பித்தன் என்று வையம் போற்றுவதற்கு என்ன காரணம் என்பதையும் நயம்பட ஒரு பாடலினுள் விளக்குகின்றார் நம் கருவூர்த் தேவர். பெண்டிர்பால் பேராசை வைத்து, அவ்வாசையில் இலட்சத்தில் ஒரு பங்கு எனும் சிறிய அளவு ஆசையை

வைத்த போதிலும், தேவலோகத்தை அத்தகு அடியார்க்கும் வழங்குவதால் சிவபெருமானுக்குப் ''பித்தன்'' என்ற பெயர் பொருந்துவதே என்று கருவூர்த் தேவர் பாடியுள்ள பாடல் பின்வருமாறு:

''தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவை நூறுஆயிரங் கூறுஇட்டு
அத்திலங்கு ஒருகூறு உன்கண் வைத்தவருக்கு
அமருலகு அளிக்கும்நின் பெருமை
பித்தனென்று ஒருகால் பேசுவரேனும்
பிழைத்துஅவை பொறுத்துஅருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.''

''நமசிவாய'' ஐந்தெழுத்து விளைக்கும் அற்புதங்களையும் அழகுறத் தொகுத்துப் பாடியுள்ளார் கருவூர்த் தேவர்.

''அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே?
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்து உள்ளம் அள்ளூறும்
தொண்டருக்கு எண்திசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும்
பவளவாயவர் பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதும்ஆம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே''

எனும் பாடலில் மனைவியோடு இன்புறும் இல்லற சுகமும் இறையடியார்க்கே இனிதினில் வாய்க்கும் என அறிவுறுத்தியுள்ளார் கருவூர்த்தேவர்.

இறைவன், அன்பு பூண்டொழுகும் அடியார் மனமே திருக்கோயிலாய் வீற்றிருந்து அருள்பாலிக்கும் எளிவந்த தன்மையனாய்த் திகழ்வதை

''பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்நெடுங் கோயில் நெஞ்சு வீற்றிருந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்
மின்னெடும் புருவத்து இளமையில் அனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத்து இவர்க்கே.''

கருவூர்த் தேவர் பாடியுள்ள திருவிசைப்பாப் பாடல்கள் புறநீர்மை, காந்தாரம், பஞ்சமம் எனும் மூன்று பண்களில் அமைந்து

''நமக்கும் அன்பின் பெருகிய
அருச்சனை பாட்டே ஆகும்''

தணிகைமலை தரிசனம்

சீர்கொண்ட தெய்வ வதனங்கள்
ஆறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும்
தாமரைத் தாள்களும் ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும்நற்
கோழிக் கொடியும் அருள்
கார்கொண்ட வண்மைத் தணிகா
சலமும்என் கண்ணுற்றதே.

- அருட்பிரகாச வள்ளலார்.

என்ற தெய்வச் சேக்கிழார் வாக்கினுக்கு இலக்கணமாகத் திகழ்கின்றன.

''செங்கணா போற்றி! திசைமுகா போற்றி!
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி! அமரனே போற்றி!
அமரர்கள் தலைவனே போற்றி!
தங்கள்நான் மறைநூல் சகலமும் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நா யகனே போற்றி! ஏழ்இருக்கை
இறைவனே போற்றியே போற்றி''

எனத் தமிழ் அருச்சனையாகப் போற்றுகின்றார் கருவூர்த்தேவர்.

இத்தகைய அற்புதங்கள் புரிந்த - அற்புதப் பதிகங்கள் பாடிப் பரவிய கருவூர்த் தேவரின் சந்நிதியை கருவூர்ப் பசுபதீசுவரர் ஆலயத்துள் வெளிப்பிரகாரத்திலும், தஞ்சை பிரகதீசுவரர் ஆலய வெளிப்பிரகாரத்திலும் கண்டு வழிபடலாம். இத்தலங்களில் நாள்தோறும் நித்திய பூசையும், வியாழன் தோறும் சிறப்புப் பூசையும் நம் கருவூர்த் தேவருக்கு நடைபெற்று வருகின்றன.

''யாதுநீ நினைவது? எவரையாம் உடையது?
எவர்களும் யாவையும் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்துஎன்
பனிமலர்க் கண்ணுள் நின்றகலான்
கேதகை நிழலைக் குருகென மருவிக்
கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தன்என் மனம் புகுந்தானே''.

திருச்சிற்றம்பலம்.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்க!

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

நந்தகோகுலத்திலுள்ளவர்கள் ஆனந்தமாக இருந்துவரும்போது, வருடாவருடம் இந்திரனுக்காக நடத்தப்படும்; யாகம் செய்ய வேண்டிய காலம் வந்தது. மூன்று லோகங்களுக்கும் அதிபதியாக இருப்பதினால், இந்திரன் தன்னாலேயே எல்லா காரியங்களும் நடந்துவருகின்றன என்ற கர்வம் அடைந் திருந்தான். கிருஷ்ணனும், அந்தக்கர்வத்தை அடக்கினால்தான் தேவர்களுக்கு சேமம் ஏற்படும் என்று எண்ணினான்.

நந்தகோகுலத்திலுள்ள முதியோர் எல்லோரும், நந்தகோபருடைய மாளிகையில்கூடி யாகம் செய்வதற் கான ஆலோசனைகளில் ஈடுபட்டனர். கிருஷ்ணன் அவர்களிடம் சென்று தானும் அந்த யோசனைகளில் கலந்துகொண்டான். ''அப்பா, இந்த யாகம் எக்காரணம் குறித்துச்செய்யப்படுகிறது? யாருக்காகச்செய்கிறோம்'' என்று ஒன்றும் தெரியாதவன்போல் கேட்டான் தந்தை யிடம்.

நந்தகோபரும், ''குழந்தாய், இந்த யாகம் தேவர் களுக்கெல்லாம் அதிபதியாக இந்திரன் நியமிக்கப் பட்டிருக்கிறான். அவன் அனுக்கிரகத்தால் காலங்களில் மழைபொழிந்து நாடும் மக்களும் செழித்து இருக்க முடிகிறது. ஆகவே, இந்திரனைத்திருப்தி செய்வதற்காக இந்த யாகம், வருஷாவருஷம் நடத்தப்படுகிறது'' என்றார்.

கண்ணனும், ''அப்பா! எனக்கொரு யோசனை தோன்றுகிறது, சொல்லுகிறேன் கேளுங்கள், இந்திரனே மேகங்களுக்கு அதிபதியாகி இருந்து மழைபொழியச் செய்கிறான், என்றாலும் பகவான் நாராயணன் அல்லவா அவனை அந்தக் காரியத்துக்காக நியமித் துள்ளார். ஆகவே, நாராயணனை நாம் திருப்தி செய்ய அவனைக் குறித்து யாகம் செய்வதே சரி எனத் தோன்றுகிறது. பகவானுக்குப் பிராம்மணர்களிடமும், பசு முதலான மிருகங்களிடமும் அளவற்ற பிரியம் அன்றோ! ஆகவே அந்தணர்களை வரவழைத்து அவர்கள் திருப்திஅடையும்படி தானதர்மங்களை வழங்கி பசு முதலான மிருகங்களுக்கு வயிறார உணவளித்து அவற்றுக்கு ஆதாரமாக இருக்கும் வனங்கள், நதிகள் (பர்வதங்கள்) மலைகள் ஆகிய வற்றைக் குறித்து பூஜைகள் செய்வதுதான் உகந்தது'' என்று நான் நினைக்கிறேன்; அப்புறம் உங்கள் விருப்பம்'' என்றான்.

கிருஷ்ணன் வார்த்தைக்கு மறுவார்த்தை என்பது கோகுலத்தில் கிடையாது. அவன் கூறியபடியே பர்வதராஜனைக் குறித்து பூஜை செய்வது என்று எல்லோரும் முடிவுசெய்தனர். இந்திர யாகத்துக்காக சேகரிக்கப்பட்டப் பொருள்களைக் கொண்டு கிருஷ்ணன் கூறியபடி பூஜைகளைத் தொடங்கினர்.

வேதசாஸ்திரங்களில் தேர்ச்சிபெற்ற அந்தணர் களை வரவழைத்து அவர்களைப் பூஜித்து அவர்கள் திருப்தியடையும் வகையான தானதர்மங்களை வழங்கி னர். மாடு, கன்றுகளை நீராட்டி மஞ்சள் குங்குமம் பூசி, மலர்மாலைகளை அணிவித்து, கால்களின் குளம்பு களுக்குச் சலங்கைகள் கட்டி, தீபாராதனை செய்து, பலவித சித்ரான்னங்களைப் படைத்து அதை உண்ணச் செய்து ருசிமிக்க புற்களை அரிந்துவந்து அவைகளுக்குப் போட்டனர். அதன் பின்னர் அனைவரும் பட்டாடை கள் உடுத்தி நகைகள் அணிந்து அலங்கரித்துக்கொண்டு கூட்டம் கூட்டமாக நதிதீரங்களுக்கும் வனங்களுக்கும் அருகில் உள்ள மலை அடிவாரங்களுக்கும் சென்று வழிபட்டு ஆனந்தமாக வழிபட்டுத் திரும்பினர்.

வழக்கத்துக்கு மாறாக கோகுலத்துமக்கள் பர்வத ராஜனை பூஜித்ததைக்கண்ட இந்திரனுக்குக் கடுமை யாகக் கோபம் உண்டாயிற்று. தன்னை அலட்சியப் படுத்திய அவர்களைத் தண்டிக்க எண்ணினான். உடனே மேகங்களை அழைத்தான். ''கோகுலத்து மக்கள் எனக்கு செய்யவேண்டிய பூஜையை, யாரோ இடைப் பையன் சொன்னான் என்று நிறுத்திவிட்டார்கள். பயங்கர மழையினால் அவர்களை கூண்டோடு அழித்து விட்டு வாருங்கள்'' என்று உத்தரவிட்டான்.

இந்திரனுடைய கட்டளைக்கிணங்க மேகங்கள் கோகுலத்தை அடைந்தன. காது செவிடாகும்படி இடி முழங்க, கண்களைப் பறிக்கத்தக்க மின்னல்களுடன், பலமான காற்றால் மரங்கள் முறிந்துவிழுந்து, மழை கொட்டத்துவங்கியது.

கோகுலத்து மக்கள் நடுநடுங்கிப்போய்விட்டனர். இதுநாள்வரை அவர்கள் கண்டிராத நிகழ்ச்சியாக இருந்ததில், பயந்து கண்ணனிடம் வந்து முறையிட்டனர். ''கிருஷ்ணா?! இதென்ன அசுரர்களுடைய வேலையா? கோகுலத்தை அழித்துவிடும் எண்ணம் கொண்டு வந்துள்ளனரா?'' இதுவரை வந்த ஆபத்துக்களிலிருந்து காத்த நீ எங்களை இப்பொழுதும் காப்பாற்றவேண்டும்'', என்று பலவாறு வேண்டி நின்றனர்.

கிருஷ்ணருக்கும், இது இந்திரனுடைய வேலையே என்று தெரிந்துவிட்டது. அனைவரையும், பயப்படவேண்டாம் என்று சொல்லி, கொட்டும் மழையில், பக்கத்திலுள்ள மலை அடிவாரத்துக்குச் சென்ற பகவான், பிறர்கண்களுக்குத் தெரியாவண்ணம் பிரம்மாண்டமான ரூபத்தைத் தரித்துக்கொண்டு, அந்த மலையையே பெயர்த்துத் தூக்கித்தம்முடைய சுண்டு விரலிலே தாங்கிக்கொண்டார். ''பயப்படாமல் எல்லோரும் இதனடியில் வந்து தங்குங்கள், எப்பொழுதும் போல் உங்கள் காரியங்களை கவனிக்கலாம். இந்த மலை உங்கள்மீது விழுந்துவிடுமோ என்ற கவலை சிறிதும் வேண்டாம்'' என்று அருளினார்.

கிருஷ்ணனின் சொல்லினால் அனைவரும் தங்கள் குழந்தைகளுடனும், மாடு கன்றுகளுடனும் சென்று பதுங்கினர். பகவான் அவர்கள் நடுவே மலையைத் தாங்கி நின்றார்.

ஒருநாள் இரண்டு நாள் என்று ஏழு நாட்கள் தொடர்ந்து மழை பெய்தது. கோகுலம் அழிந்திருக்குமென்று அதைப்பார்க்க இந்திரன் புறப்பட்டுவந்தான். அங்கு பகவான் பர்வதத்தைக் குடையாகப் பிடித்திருப்பதையும் அதனடியில் கோகுலத்து மக்கள், நிர்பயமாய் தங்கள் குடும்பங்களுடன் அவரவர் வேலைகளைச் செய்துகொண்டும் இருப்பதைக் கண்டு வருடக் கணக்கில் மழைபெய்தாலும் ஒன்றும் நடக்காது என தெரிந்துகொண்டான். மேலும், பகவானை உணராது, தான் அவரை எதிர்த்தது எத்தனை முட்டாள்தனம் என்பதை உணர்ந்தான்! மேகங்களைத் திரும்பிச் செல்லச் சொன்னான்; மழை நின்றது. வானமும் வெளிச்சத்திற்கு வந்தது! பகவானும் அனைவரையும் அவரவர் இல்லங்களுக்குத் திரும்பிச் செல்லுமாறு கூறினார்.

கோகுலத்து மக்கள் அனைவரும் கிருஷ்ணரைக் கொண்டாடினார்கள். பல இன்னல்களில் தங்களைக் காத்து வந்ததால் கண்ணனைத் தெய்வமாகவே கொண்டாடினார்கள! மேலும், ''நாங்கள் பக்தியோடு வணங்கும் நாராயணா'' என்று நெஞ்சம் தழுதழுக்கத் தொழுதார்கள்.

நந்தகோபரும் அவர்களைப் பார்த்து, ''இக் குழந்தைகளின் நாமகரணத்தின் போது, (பெயர் சூட்டு விழா) வந்திருந்த 'கர்காசிரியர்' என்னைத் தனிமையில் அழைத்து 'பரந்தாமனுடைய அம்சமாகவே இந்த ராமகிருஷ்ணர்கள் அவதாரம் செய்திருக்கிறார்கள் என்றும், இவர்களால் நம்முடைய குலம் விளங்கப் போகிறது என்றும் சொன்னார்'', என்றார். அனைவரும் பலவாறு போற்றித்துதித்து வலம் வந்து அவரது திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள்.

அமராவதி திரும்பிய இந்திரனுக்கு நான்முகன் புத்திமதிகள் பல கூறியதில், இந்திரனும் தன் காம தேனுவை உடன் அழைத்துக் கொண்டு யமுனா தீரத்துக்கு வந்தான். கண்ணனிடம் தன் தவறைக் கூறி மன்னிப்புக்கோரினான். கண்ணனும், ''என் அன்புக்குப் பாத்திரமானவர்கள் தர்ம வழியை விட்டு விலகிச் செல்லும்போது அவர்களை நல்வழிப் படுத்துவது என் கடமை ஆகும். மூவுலகத்திற்கும் அதிபதி என்ற எண்ணம் உன் மனத்திலே கர்வத்தை உண்டாக்கியது. உனக்கு மிஞ்சிய தேவதைகள் இல்லை என்ற அகம் பாவம் உன்னிடத்தில் தலையெடுத்தது. அதனால் உனக்கு அழிவு நேரிடக்கூடாதே என்று தடுக்கவே உன்னைத் தண்டித்தேன். எப்பொழுது உன் மனதிலே குடிகொண்டிருந்த அகம்பாவம் நீங்கியதோ அப்போதே நீ என் அன்புக்குப் பாத்திரனாகி விட்டாய்'' என்றார்.

இந்திரனும் தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டி, 'கண்ணனை தேவாதிபத்திய பட்டத்தை ஏற்க வேண்டும்' என்று வேண்டினான்.

கண்ணனும் மெல்ல சிரித்த வண்ணம், ''இந்திரா! உனக்கு அந்த ஆசை உண்டானால் அதை நான் தடுக்கவில்லை'' என்றார்.

இந்திரனும், பகவானுக்கு கோவிந்தபட்டாபிஷேகம் செய்வித்து கண் குளிரக் கண்டு ஆனந்தித்தான். 'கோவிந்தா, மாதவா, கிருஷ்ணா நாராயணா' என்று தேவர்கள் பகவானுடைய திவ்ய நாமங்களைக் கூறி அவரைக் கொண்டாடினார்கள்! இந்திரன் மகிழ்ச்சியில் உள்ளம் நிறைந்தவனாய் தேவலோகம் திரும்பினான்!

கோகுலத்து மக்கள் ஒவ்வொரு ஏகாதசி அன்றும் உபவாசம் இருந்து, மறு நாள் பாரணை (துவாதசியில்) செய்வது உண்டு. இரவு முழுவதும் கண்விழித்து பகவானைக் குறித்துப் பாடல்கள் பாடியும், புகழ்ந்தும் மகிழ்வர். அதேபோல் அன்றைய தின ஏகாதசியில் வழக்கம் போல், விடிவதற்கு முன் நீராடப்புறப்பட்டுச் சென்றனர். மடுவிலே இறங்கி நீராடினர்.

அப்போது, நதியிலே வருணனுடைய தூதர்கள் சிலர் நீராடிக் கொண்டிருந்தனர். அவர்கள் நந்தகோபரை யாரென்று அறியாமல், பிறருக்குத் தெரியாமல், பிடித்துத் தங்கள் லோகத்திற்குக் கொண்டு போயினர்.

நீராடிக் கரையேறிய கோபாலர்கள், நந்தகோபரைக் காணாது திடுக்கிட்டனர். சிலர் மடுவில் இறங்கி நீரிலே மூழ்கித்தேடினர். அவரைக் காணாமல் திடுக்கிட்டவர்களாய், கிருஷ்ணரிடம் ஓடிவந்து தெரிவித்தனர்.

கிருஷ்ணனுக்கு நடந்தது விளங்கிவிட்டது! அவர்களிடம் ஆறுதல் கூறிவிட்டு, வருணனுடைய லோகத்திற்குச் சென்றார்.

கிருஷ்ணனுடைய வரவை அறிந்த வருணன் ஓடிவந்து, அவருடைய பாதங்களைக் கழுவி கண்களில் ஒற்றிக் கொண்டு வரவேற்றான். ''பிரபோ! தங்களுடைய வரவால் என் இருப்பிடம் புனிதமடைந்ததோடு, தங்கள் பாதங்களைப் பூஜிக்கும் பாக்யமும் பெற்றேன். தங்கள் கருணைக்கடலான பார்வையால் என்னை ரட்சிக்க வேண்டுகிறேன். அகாலத்தில் நதியில் நீராடிய போது என்னுடைய ஆட்கள் சிலர் தங்கள் தந்தையை யாரென்று அறியாது பிடித்து வந்து விட்டார்கள். என்னால் அவர் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். தங்கள் தந்தையாரை அழைத்துச் செல்லுமாறு வேண்டுகிறேன்'', என்று பிரார்த்தித்தான்.

பகவானும் வருணனுக்கு அருள்புரிந்து, அவன் வேண்டுகோள்படி, தந்தையை அழைத்துக் கொண்டு யமுனா தீரம் திரும்பினார். நந்தகோபரைக் கண்ட கோபாலர்கள் மகிழ்ச்சியால் பகவானைக் கொண்டாடினார்கள். நந்தகோபரும் தாம் வருண லோகத்தில் கண்டது பற்றி அவர்களிடம் ஆனந்தம் பொங்க வர்ணித்தார்.

ஒரு சமயம் கோகுலத்தில் கோபியர்களை கண்ணனுடன் பேசவும், ஆடவும், பாடவும் கூடாது என்று பெற்றோர்கள் அவர்களை அவரவர் வீட்டில் பூட்டி வைத்தனர். அவர்கள் மனம் கண்ணனிடமே இருந்ததில், கண்ணனும் அறிந்து, மழை இல்லாமல் செய்தான். இதை அறிந்த அறிஞர்கள், கன்னிப் பெண்கள் நோன்பு நோற்க மழை பெய்யும் என்று சொல்ல, அனைத்துக் கன்னிப் பெண்களையும் நோன்பு நோற்க வேண்டி வெளியில் விட்டனர். அவர்கள் 'காத்யாயனீ' ரிஷிக்கு சேவை செய்ய, அவரின் அனுக்கிரகத்தில், 'காத்யாயனீ' விரதமகிமை, பலன் இவைகளைத் தெரிந்து அனுஷ்டித்து ஸ்ரீகிருஷ்ணனைப் பதியாக அடைந்தனர்.

மழைக்காக வேண்டுவதில் சைவ, வைணவ பேதமின்றி 'தனுர்' மாதம் என்னும் மார்கழி மாதத்தில் விடியற்காலம் என்னும் பிரம்ம முகூர்த்தத்தில் திருக்கோயில்களில் திருப்பாவை, திருவெம்பாவை ஓத்ப்படுவது என்பது நம்முன்னோர்கள் வழிவழியாக நடத்தி வரும் வழிபாடாகும்.

மேலும் ஆண்டாள் தம் திருப்பாவை நோன்பின் மூலம் ''தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து'' என்று வேண்டியுள்ளாள்.

மாணிக்கவாசகர் தம் திருவெம்பாவையில் மழைவேண்டும் பாடலில், 'மேகமானது பராசக்தியின் மேனிவண்ணம் போல் கருமைகொண்டு, பராசக்தியின் சிற்றிடை போல் மின்னல் உண்டாகி, அன்னையின் கால் பொற்சிலம்புகள் முழங்குவது போல் இடி முழங்கி, அன்னையில் திருப்புருவம் போல் வானவில் தோன்ற பாரெல்லாம் உய்ய மழைபெய்ய வேண்டும்' என்று வேண்டுவ தாக உள்ளது பாடல்!

மழையின்றி ஒரு காரியமும் செய்ய முடியாது என்பது தெளிவாகிறது.

வள்ளுவரும் மழையைப்பற்றி அமிழ்தம் என்று போற்றியுள்ளார்.

ஔவையாரும் தம் நாலடியாரில்

'நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை' என்று கூறியுள்ளார்.

மார்கழிமாத நோன்பில், விடியற்காலம் பிரம்ம முகூர்த்தத்தில் வீடுகளில் வண்ணக் கோலங்கள் வரைந்து, பசுவின் சாணங்களில் பூசணிப்பூவை அலங்கரித்து, கிருஷ்ணர் படங்களுக்கு துளசிமாலை அணிவித்து, விளக்கேற்றி, பக்திப் பாடல்கள் பாடி, இல்லை எனில் 'டேப்' நாடாவில் ஒலிக்கச்செய்து, மனதை அதில் லயிக்கச் செய்து, வெண்பொங்கல் செய்து நிவேதனம் செய்து கற்பூரம் ஏற்றிச் சிறப்பாக வழிபடுதல் வேண்டும்.

மழை வேண்டி யாகங்களும் ஓமங்களும் செய்யும் அன்பர்களிடம், தேவையான பொருட்கள் கொடுத்துச் சிறப்பாக நடத்த உதவலாம்; நாமும் பங்கேற்கலாம்.

மழையைக் கொடுக்கும் 'பர்ஜன்ய' தேவதையே! நாங்களும் மனம் உருகி உன்னை வேண்டுகிறோம். அமிழ்தமான மழையைக் கொடுத்து வாழ வழி செய்ய அனைவரும் வேண்டுகிறோம். மழையே! வருக, வருக என வரவேற்கிறோம்.

சுபம்.

★★★

தமிழகக் கோயில் திருவிழாக்கள்

- எஸ். பாஸ்கர், எம்.ஏ.

முன்னுரை:

தமிழகக் கோயில்களின் பல சிறப்புகளில் அவற்றின் விழாக்கள் முதன்மையானதும், முக்கிய மானதுமான இடத்தைப் பெறுகின்றன. விழாக் களே அனைத்து மகிழ்வுகளின் ஊற்றுக் கண்களாகும். சமூகத்து மக்கள் ஒன்றுகூடி மகிழ்ச்சியாய் இருக்க வழிவகுப்பவை விழாக் காலங்களே. மக்களின் சமய மற்றும் சமூக உந்துதல்களை முழுமையாக இவை வெளிப்படுத்துகின்றன. எந்த ஒரு நாட்டின் சிறப்பை யும் அந்த நாட்டில் கொண்டாடப்படும் விழாக்களில் காணலாம். மக்கள் ஒருவரோடு ஒருவர் நெருங்கி உறவையும், அன்பான தோழமையையும் வெளிப் படுத்திக் கொள்ள விழாக்கள் உதவுகின்றன.

குடும்ப ரீதியாக, சமூக, அரசியல் ரீதியாக, இலக்கியத் தொடர்பாக என விழாக்கள் பலவகையாக இருந்தாலும் முக்கியமாக கோயில்களோடு தொடர் புடையவையாகவே விழாக்கள் உள்ளன. இவை வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. மதுரை நகரின் பலவீதிகளின் பெயர்கள் மாதம் தோறும் கொண்டாடப்படும் விழாக்களைக் குறிக்கும் வகை யில் அமைந்துள்ளன. உதாரணமாக சித்திரை வீதி, ஆடி வீதி, ஆவணி வீதி, மாசி வீதி போன்றவை. 1300 ஆண்டுகளுக்கு முன் கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ சமயக் குரவர்களில் ஒருவரான திருஞான சம்பந்தர் (மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில்) மாதந் தோறும் நடைபெறும் விழாக்களைப் பற்றி தமது தேவாரப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

சங்க காலப் பத்துப் பாட்டுகளில் ஒன்றான மதுரைக் காஞ்சியில், மதுரையில் சைவ, வைணவ, புத்த, சமணக் கோயில்களில் கொண்டாடப்பட்ட விழாக்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

கோயில் விழாக்கள் என்பவை நமது கலாச் சாரம், தத்துவம், சமயம் ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்டவை. இந்த விழாக்களில் சிலவற்றைப் பற்றி இனி காண்போம்.

***

(1) சித்திரை (ஏப்ரல் - மே)

சித்திரை மாதத்தில் புத்தாண்டு தினம், சித்திரைப் பவுர்ணமி ஆகிய விழாக்கள் பல கோயில் களில் கொண்டாடப்படுகின்றன. புத்தாண்டு தின விழா புது வாழ்வையும், வளத்தையும் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்த விழா ஒவ்வொரு வீட்டிலும், கோயிலிலும் கொண்டாடப் படுகிறது. இந்த நாளில் திறந்தவெளியில் சூரியக் கடவுளுக்கு பூஜை செய்யப்படும். பஞ்சாங்கம் படிப்பது புத்தாண்டு நிகழ்ச்சிகளில் முக்கியமானதாகக் கிராமப்புறங்களில் கருதப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள வணிகர்கள் புத்தாண்டுக்கு முந்தைய நாளில் கணக்கை முடித்துப் புத்தாண்டு தினத்தன்று புதுக் கணக்கைத் தொடங்குவார்கள்.

அப்பரால் பாடப்பெற்ற புராதன க்ஷேத்திர மான திருக்கோடிக்காவலில் சித்திரை மாதம் அமா வாசை தினத்தில் சித்திராகுப்தனுக்கும், பவுர்ணமி தினத்தில் எமதர்மனுக்கும் வழிபாடு செய்யப்படு கிறது. இந்தக் கோயிலின் வருடாந்திர பிரம்மோற் சவம் சித்ராபவுர்ணமி விழாவாகப் பத்து நாட்க ளுக்குக் கொண்டாடப்படுகிறது.

மதுரையில் சித்திரைத் திருவிழா புகழ்மிக்கது. சொக்கநாத பெருமானுக்கும் தேவி மீனாட்சி அம்ம னுக்கும் திருமண விழாவாக இது நடைபெறும். இந்த விழா 10 நாட்களுக்கு விமரிசையாகக் கொண்டாடப் படும். கடைசி நாளன்று அழகர் சோலை எனும் கள்ளழகர் கோயிலிலிருந்து மீனாட்சியின் சகோதர ரான கள்ளழகர் மதுரையில் உள்ள வைகை ஆறு வரை வந்து திரும்புவார். லட்சக்கணக்கான மக்கள் கூடி கள்ளழகரைத் தரிசிப்பார்கள். தமிழ்நாட்டின் சிறப்புமிக்க பெரிய திருவிழாக்களில் இதுவும் ஒன் றாகும்.

நாகை மாவட்டம் நன்னிலம் அருகே உள்ள திருப்புகலூரில் ஸ்ரீ அக்னீஸ்வரஸ்வாமி ஆலயத்தில் சித்திரை சதயத் திருவிழா சித்திரை மாதத்தில் சிறப்பாக

கொண்டாடப்படும். அப்பர் (திருநாவுக்கரசர்) முக்தி அடைந்த நாளை குறிப்பதாகும் இந்த விழா.

சைவ வைணவக் கோயில்களில் இந்திரன், மன்மதன் ஆகியோரை சிறப்பிக்கும் வகையில் சித்திரை கொண்டாடப்பட்டது. காலப்போக்கில் சிறு தெய்வங்களுக்கான அந்த விழாவின் முக்கியத்துவம் குறைந்து விட்டது. சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் தம்பிரான் தோழராகக் காட்டப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தில் இந்த விழா திருவாரூரில் கொண்டாடப்பட்டது. இந்த விழாவை ஊஞ்சல் விழா அல்லது தோலோத்வம் என்றும் அழைப்பதுண்டு. உயிர்களின் போக்கு வரவை (பிறவி-மறுபிறவியை)க் குறிப்பதாகும் இந்த விழா. சித்திரை மாதத்தில் வரும் சித்திரை நட்சத்திரம், வைணவ சமயத்தின் ஆழ்வார்களில் ஒருவரும் நம்மாழ்வாரின் பக்தரான மதுரகவி ஆழ்வாருக்கு ஜென்ம நட்சத்திரமாகும்.

2. வைகாசி விசாகம் (மே - ஜூன்)

வைகாசி மாதத்திலும் முக்கியமான விழா ஒன்று உண்டு. அது வைகாசி விசாகத் திருவிழா. விசாக நட்சத்திரம் முருகப் பெருமானின் ஜென்ம நட்சத்திரமானதால் விசாகர் என்றும் முருகனை அழைப்பதுண்டு. வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரம் நாளில் இந்த விழா கொண்டாடப்படும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து முருகன் கோயில்களிலும், சிறப்பாக திருச்செந்தூர், பழநி, சுவாமி மலை, திருத்தணி ஆகிய ஊர்களில் உள்ள முருகன் கோயில்களில் இந்த விழா விமரிசையாகக் கொண்டாடப்படும்.

விசாக விழா முருகப் பெருமானுக்கு முக்கியமானதாகக் கருதப்பட்டாலும் பல இடங்களில் இதே அளவுக்கு முக்கியமானதாக சிவா, விஷ்ணு ஆலயங்களிலும் இந்த விழா கருதப்படுகிறது. இந்த நன்னாளில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருமழபாடி திருக்கோயிலில் போர் ஆயுதமான மழுவைக் கையிலேந்தி சிவபெருமான் நடனமாடியதாகக் கூறப்படுகிறது. காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலிலும் வைகாசித் திருவிழா ஆண்டுதோறும் 10 நாட்களுக்குக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாக் காலத்தில் வரதராஜ பெருமான் கருட வாகனத்தில் பக்தர்களுக்கு காட்சி தருவார்.

விசாகம் நம்மாழ்வாரின் பிறந்த நாளும் (நட்சத்திரமும்) ஆகும். இதனால் வைணவக் கோயில்களிலும் இந்த விழாக் கொண்டாடப்படும். மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றான நரசிம்ம அவதாரத்திற்கு விசாக விழா மிகவும் முக்கியமானதாகும். சிம்மாச்சலத்தில் (சிமாச்சலம் ஆந்திர மாநிலத்தில் உள்ளது) இந்த விழா நடைபெறும். இரணிய வதத்தால் கொதிப்புற்ற நரசிம்மாவதாரத்தைக் குளிர்விக்க இந்த ஆலயத்தில் உள்ள நரசிம்மமூர்த்தியின் திருமேனி எப்போதும் சந்தனக் காப்பு செய்யப்பட்டிருக்கும். ஆனால் விசாக நாளில் மட்டும் சந்தனக்காப்பு நீக்கப்பட்டு நரசிம்ம மூர்த்தி பக்தர்களுக்கு காட்சி தருவார்.

3. ஆனி (ஜூன் - ஜூலை)

ஆனி மாதத்தில் ஆனி உத்திரம் என்பது முக்கியமான நாளாகும். இந்நாளில் உத்திர நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும். இந்த நன்னாளில் நடராஜ பெருமானுக்கு திருமஞ்சனம் எனும் புனித நீராட்டு சிறப்பாக நடைபெறும்.

ஆண்டின் ஒவ்வொரு நாளிலும் எல்லாக் கோயில்களிலும் சிவலிங்கத்திற்கு பலகால அபிஷேகம் நடைபெறும். ஆனால் நடராஜ பெருமானுக்கு அனைத்துக் கோயில்களிலும் ஆண்டில் ஆறு நாட்கள் தான் விசேஷ அபிஷேகம் நடைபெறும். அந்த ஆறு நாட்கள் வருமாறு:

1. சித்திரை திருவோணம்
2. ஆனி உத்திரம்
3. ஆவணி சதுர்த்தி
4. புரட்டாசி சதுர்த்தி
5. மார்கழி ஆருத்ரா (திருவாதிரை)
6. மாசி சதுர்த்தி

இந்த ஆறு நாட்களும் ஒரு நாளின் ஆறு அங்கங்களாக கருதப்படுகின்றன. அவை:

1. மார்கழித் திருவாதிரை - விடியற் காலை நேரம்
2. மாசி சதுர்த்தி - உஷாகாலம் அதாவது காலை நேரம்
3. சித்திரை திருவோணம் - நண்பகல்
4. ஆனி உத்திரம் - பிரதோஷ காலம் - அதாவது பிற்பகல்
5. ஆவணி சதுர்த்தி - மாலை
6. புரட்டாசி சதுர்த்தி - நள்ளிரவு

நடராஜப் பெருமானுக்கு செய்யப்படும் இந்த ஆறு அபிஷேகங்களில் ஆனி உத்திரத்தன்றும், மார்கழி திருவாதிரையிலும் செய்யப்படும் அபிஷேகங்கள் மிகவும் முக்கியமானவை. ஆனி உத்திரம் திருமஞ்சன விழா சிதம்பரத்தில் தேர்த்திரு விழாவாக விமரிசையுடன் 10 நாட்கள் கொண்டாடப்படுகிறது.

4. ஆடி (ஜூலை - ஆகஸ்ட்)

ஆடி மாதத்தில் ஆடிப்பூரம் திருவிழா சைவ, வைணவ ஆலயங்களில் கொண்டாடப்படுகிறது. பூரம் நட்சத்திரம் பொதுவாக அம்பாள் அல்லது சக்தி தேவியின் ஜென்ம நட்சத்திரமாகக் கருதப்படுகிறது. இதனால் பெரும்பாலும் அனைத்து சிவாலயங்களி லும் இந்த விழா நடைபெறும். ஸ்ரீஆண்டாளுக்கும் ஆடிப்பூரம் ஜென்ம நட்சத்திரம் என்பதால் வைணவர் களுக்கும் இந்நாள் புனித நாளாக உள்ளது. திரு வில்லிபுத்தூரில் உள்ள ஸ்ரீ ஆண்டாள் கோயிலில் ஆடிப்பூரம் விழா 10 நாட்களுக்கு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

மேல்மருவத்தூரில் ஆடிப்பூரம் விழா ஆதிபரா சக்தி சித்தர் பீடகோயிலின் சார்பில் வெகு விமரிசை யாக 10 நாட்கள் கொண்டாடப்படுகிறது. நாடு முழு வதிலும் இருந்து செவ்வாடைத் தொண்டர்கள் இங்கு வந்து ஆடிப்பூரம் விழாவை கொண்டாடுகிறார்கள்.

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோயிலில் உள்ள சிவாலயத்தில் சங்கரநாராயணர் ஆடித்தபசு விழா கொண்டாடப்படுகிறது. அம்பாள் விஷ்ணுவின் சகோதரியாவாள். இந்த ஆலயத்தில் கோமதி தேவி யாக எழுந்தருளியிருக்கும் அம்பாள், சிவனையும் விஷ்ணுவையும் ஒன்றாகத் தரிசனம் செய்ய விரும்பி னாள். இதற்காக தவம் மேற்கொண்டாள். அம்பாளின் இந்த ஆர்வத்தை மெச்சிய சிவனும் விஷ்ணுவும் இங்கே சங்கரநாராயணராக ஒன்றிக் காட்சியளித்தனர். இங்கே இருவரும் இணைந்து நின்ற தோற்றத்தை ஆழ்வார்களும் நாயன்மார்களும் போற்றிப் பாடியுள் ளனர். இதுமட்டுமின்றி கிராம தேவதைகள் எனப் படும் சிறு தெய்வங்களுக்கும், மாரியம்மனுக்கும் மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் ஆடிப்பூரம் விழா உற்சாகத்துடன் கொண்டாடப்படு கிறது.

5. ஆவணி (ஆகஸ்ட் - செப்டம்பர்)

ஆவணி மாதத்தில் விநாயகர் சதுர்த்தி விழா வும், ஆவணி மூலம் விழாவும் நடத்தப்படுவது குறிப் பிடத்தக்கது. ஆவணி மாதத்தின் வளர்பிறை காலத் தில் 4வது நாளான சதுர்த்தி திதியன்று விநாயகர் விழா நடத்தப்படுகிறது. தற்காலத்தில் பிள்ளையார் சதுர்த்தி விழா வெகு விமரிசையாக கொண்டாடப் படுகிறது. விநாயகர் சதுர்த்தி முடிந்து எட்டு நாள் கழித்து பிள்ளையாரை கடலில் கரைக்கும் வைபவம் கோலாகலமாக நடத்தப்பட்டு வருகிறது. எந்தக் காரி யத்தையும் துவங்குவதற்கு முன் முதலில் விநாயக ருக்கு விழா நடத்தப்படுகிறது.

ஆவணி மூலம் திருவிழா இந்த மாதத்தின் இன்னொரு முக்கிய திருவிழாவாகும். இந்த திரு விழா மதுரையில் மட்டுமின்றி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிவாலயங்களிலும் கொண்டாடப்படுகிறது.

6. புரட்டாசி (செப்டம்பர்-அக்டோபர்)

புரட்டாசி மாதத்தில் சரஸ்வதி பூஜை மிகுந்த உற்சாகத்தோடும் பக்தி சிரத்தையோடும் கொண் டாடப்படுகிறது. அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களில் இதுவும் ஒன்று. புரட்டாசி மாத அமாவாசையைத் தொடர்ந்து 9 நாட்கள் இந்த விழா கொண்டாடப்படுகிறது. 9வது நாளான மகாநவமி யன்று நிறைவு பெறுகிறது. இதனால் நவராத்திரி என்றும் இந்த விழா கூறப்படுகிறது. 10வது நாளான மகாதசமியும் இந்த விழாவோடு சேர்க்கப்பட்டு தசரா பண்டிகை என்றும் அழைக்கப்படுவதுண்டு.

மகாவிஷ்ணுவுக்குரிய புனித மாதமாகவும் புரட்டாசி கருதப்படுகிறது. இந்த மாதத்தின் அனைத்து சனிக்கிழமைகளிலும் மக்கள் விரதமிருந்து வைணவ ஆலயங்களில் மகாவிஷ்ணுவுக்கு வழிபாடு செய்வார் கள். இந்த மாதத்தில் திருப்பதி ஸ்ரீவெங்கடேச பெரு மாளுக்கு பிரமோத்சவ விழா மிகச் சிறப்பாகக் கொண் டாடப்படும்.

7. ஐப்பசி - (அக்டோபர்-நவம்பர்)

இந்த மாதத்தில் தீபாவளிப் பண்டிகை கொண் டாடப்படுகிறது. தீபாவளி இந்தியாவின் மிகப் பெரிய திருவிழாவாகும். ஐப்பசி மாதம் தேய்பிறை காலத் தில் 14வது நாள் இரவில் தீபாவளி பண்டிகை கொண் டாடப்படும். அடுத்த நாள் அமாவாசை ஆகும். தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று பொருள் படும். காலைப்பொழுது புலரும் முன் எண்ணெய் நீராடலுடன் தீபாவளிப் பண்டிகை வரவேற்கப்படும். புத்தாடைகள் அணிந்து, ஒன்றாகக் கூடி, இனிப்புப் பண்டங்கள், உணவு வகைகளும் செய்து விருந்துண்டு மகிழும் நாளாகும் இது. சிறார்களும் வாலிபப் பருவத் தினரும் பட்டாசு வெடித்துத் தீபாவளியைக் கொண் டாடுவார்கள். இது ஒரு சமூகத் திருவிழா. கோயில் களோடு தொடர்புடையதல்ல. இருப்பினும் சைவர் கள், வைணவர்கள், சமணர்கள், சீக்கியர்கள் ஆகியோர் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

கந்த சஷ்டி

ஐப்பசி மாதத்தின் இன்னொரு முக்கிய விழா கந்த சஷ்டி விழாவாகும். முருக பெருமானை (ஸ்கந் தனை) சிறப்பித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிவன் கோயில்களிலும், முருகன் ஆலயங்களிலும்

இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த மாதத்தின் வளர்பிறை காலத்தில் 6வது (சஷ்டி) நாளன்று விழா நடைபெறும். தமிழகத்தில் உள்ள முருக பக்தர்கள் 6 நாட்கள் உண்ணாநோன்பிருந்து உள்ளூரில் உள்ள முருகன் கோயிலிலோ அல்லது மற்ற பிற சிறப்பு முருகன் கோயில்களிலோ வழிபாடு செய்வார்கள். அனைத்து முருகன் கோயில்களிலும் இந்த விழா கொண்டாடப்பட்டாலும் நாகப்பட்டினம் அருகே உள்ள சிக்கலிலும், திருச்செந்தூரிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சிக்கலில் பார்வதியிடமிருந்து வேல் பெற்ற முருகப் பெருமான், திருச்செந்தூரில் தேவர்களுக்குத் தொல்லை கொடுத்த சூரபத்மனை வதம் செய்தார். இதனால் கந்த சஷ்டி விழா, சூரசம்மார விழா என்றும் அழைக்கப்படும். திருச்செந்தூரில் சூரசம்ஹாரம் நிகழ்ந்தது.

இதனால் கடற்கரை கோயிலான திருச்செந்தூருக்கு இந்த விழாவின்போது லட்சக்கணக்கான மக்கள் வருவார்கள். கந்த சஷ்டி விழா தமிழ்நாட்டில் மிகவும் பிரசித்த பெற்ற பிரமாண்ட திருவிழாவாகும். சிவசக்தியிடமிருந்து பேரறிவை (ஞானத்தை) பெறும் உயிர், அதனைக் கொண்டு அறியாமையை வென்று இறுதியில் ஆண்டவனோடு ஐக்கியமாகிறது என்பது இந்த விழாவின் உருவகமாகும்.

8. கார்த்திகை (நவம்பர் - டிசம்பர்)

கார்த்திகை மாதத்தில் குறிப்பிடத்தக்கது தீபத் திருவிழாவாகும். தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அனைத்து வீடுகளிலும் இந்த விழா கொண்டாடப்படும் திருவண்ணாமலையில் இந்த விழா மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. பவுர்ணமி நாளும், கார்த்திகை நட்சத்திரமும் ஒன்றிணையும் நாளில் கார்த்திகை தீபத்திருவிழா கொண்டாடப்படுகிறது. இந்த நாளின் மாலை வேளையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிவாலயங்களிலும் ஆயிரக்கணக்கான தீபங்களால் அலங்கரிக்கப்படும். ஒவ்வொரு வீட்டிலும் ஏராளமாக ஒளிவிளக்குகளை ஏற்றி வைப்பார்கள். (1300 ஆண்டுகளுக்கு முன்னே மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் கார்த்திகை தீபத்திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்ட குறிப்புகள் திருஞானசம்பந்தரின் திருமயிலைப் பதிகத்திலும் உள்ளன. இதன் மூலம் இந்த விழாவின் பழைமையை நாம் அறிந்து கொள்ளலாம்.) சங்கப் பாடல்களிலும் இந்த விழா பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன.

9. மார்கழி (ஜனவரி - டிசம்பர்)

மார்கழி மாதத்தில் இரண்டு முக்கிய விழாக்கள் நடைபெறுகின்றன ஒன்று சைவர்கள் கொண்டாடும் திருவாதிரை (ஆருத்ரா) விழா, மற்றொன்று வைணவர்கள் கொண்டாடும் வைகுண்ட ஏதாதசி, திருவாதிரை விழா அனைத்து சிவாலயங்களிலும் கொண்டாடப்பட்டாலும் சிறப்பு முக்கியத்துவம் பெறுவது சிதம்பரத்தில் தான். இதேபோல் வைகுண்ட ஏகாதசியும் அனைத்து வைணவ ஆலயங்களிலும் கொண்டாடப்பட்டாலும், முக்கியமாகக் கொண்டாடப்படுவது ஸ்ரீரங்கத்தில் தான். சைவ சமயத்துக்கான ஆருத்ரா தரிசனமும், வைணவ சமயத்து வைகுண்ட ஏகாதசியும் இந்த மாதத்தில் நடைபெறுவது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஆருத்ரா தரிசனம்

திருவாதிரை என்பது நடராஜ பெருமானுக்கு உகந்த நாளாகும். கருவிலே திருவுடையரான திருஞான சம்பந்தரின் ஜென்ம நட்சத்திரம் திருவாதிரை. இந்தப் புனித நாளில்தான் இவருக்கு பார்வதி தேவி ஞானப் பால் கொடுத்தார். 1300 ஆண்டுகளுக்கு முன் கி.பி. 7ம் நூற்றாண்டில் திருவாரூரில் திருவாதிரை விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்ட குறிப்பு அப்பர் தேவாரம் ஒன்றில் உள்ளது.

அனைத்து உயிர்களையும் மேம்படுத்தும் வகையில் சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்ற நடராஜ பெருமானின் ஐந்து வகை செயல்பாடுகளை இந்த விழா அடையாளபூர்வமாகக் கொண்டிருக்கிறது என்று கருதப்படுகிறது. நடராஜ பெருமானின் வெவ்வேறு தலங்களில் 5 வகை தாண்டவங்கள் ஆடியதாகக் கூறப்படுகிறது.

சிதம்பரம்	கனகசபை	ஆனந்ததாண்டவம்
மதுரை	ரசிதசபை	கவுரிதாண்டவம்
திருக்குற்றாலம்	சித்திரசபை	திரிபுரதாண்டவம்
திருவாலங்காடு	ரத்னசபை	காளிதாண்டவம்
திருநெல்வேலி	தாமிரசபை	முனிதாண்டவம்

சிதம்பரத்தில் நடராஜர் பெருமான் எப்போதும் ஆனந்த தாண்டவம் ஆடுகிறார். நடராஜ பெருமானின் 5 வகை செயல்பாடுகளை ஆனந்த தாண்டவம் ஒன்றாகப் பிரதிபலிப்பதால் திருவாதிரைப் பெருவிழா சிறப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதத்தில் மற்றொரு முக்கியத் திருவிழா வைகுண்ட ஏகாதசியாகும். ஒவ்வொரு மாதத்திலும் ஏகாதசி என்பது வளர்பிறையில் ஒரு நாளும் தேய்பிறையில் ஒரு நாளும் என இரண்டு முறை வரும். ஆனால் மார்கழி மாத வளர்பிறையில் வரும் ஏகாதசி

சிறப்பு மிக்கதாகக் கருதப்படுகிறது. இந்த ஏகாதசி விழாவோடு துர்வாசர், முராசுரன், ருக்மாங்கதன் போன்றோருக்கு தொடர்பு உள்ளது. மார்கழி மாத ஏகாதசி மூன்று கோடி ஏகாதசிக்குச் சமம் என்பதால் இதனை முக்கோடி ஏகாதசி என்றும் கூறுவர்.

இந்த நாளில் உண்ணாவிரதம் இருப்பதும் இரவில் கண்விழிப்பதும் வழக்கம். விஷ்ணு பக்தர்கள் சிரத்தையோடு உண்ணாவிரதமிருந்து இரவெல்லாம் கண் விழித்து அதிகாலையில் கோயிலுக்குச் சென்று வழிபடுவார்கள். முக்கியமான வைணவ ஆலயங்களில் பெருமாளை தரிசிக்க சிறப்பு வாயில் இருக்கும். இது சொர்க்கவாசல் என்று அழைக்கப்படும். இந்த வாசல் பொதுவாக ஆண்டு முழுவதும் மூடப்பட்டிருக்கும். ஏகாதசி நாளன்று இந்த வாசல் பக்தர்களுக்குத் திறக்கப்படும். இங்கே அவர்கள் செல்வது வைகுண்டத்துக்குச் செல்வதற்கு ஒப்பாகும். இந்த விழாவின் இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால் ஏகாதசிக்கு முந்தையப் பத்து நாளிலும் பிந்தையப் பத்து நாளிலும் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தில் நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாராயணம் நடைபெறும். இதனை அத்யயன உற்சவம் (பகல் பத்து, இராப்பத்து) என்றும் கூறுவார்கள். இந்த நாட்கள் சிலவற்றில் இசைவாணர்கள் நம்மாழ்வாரின் திருவாய்மொழி பாடல்களை இனிமையாகப் பாடுவார்கள். அரையர்கள் இந்தப் பாடல்களுக்கு அபிநயம் பிடித்து நாட்டி யம் ஆடுவர்.

10. தை (ஜனவரி - பிப்ரவரி)

பொங்கல் பண்டிகை

பொங்கல் பண்டிகை மற்றும் சங்கராந்தி விழா காரணமாக தை மாதம் பிரபலமானது. தை மாதம் முதல் நாளில் சூரியன் 9-ம் இடமான தனுசுவிலிருந்து பத்தாம் இடமான மகரத்துக்குச் செல்லும். தெற்கிலிருந்து வடக்கு நோக்கிய சூரியனின் இந்தப் பயணத்தை உத்தராயணம் என்பர். உத்தராயணத்தின் முதல் நாளான தை மாதம் முதல் தேதியிலிருந்து பொங்கல் விழா நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து கொண்டாடப்படுகிறது. தை மாதத்தின் முதல் நாளில் பொங்கல் பண்டிகையும் அதற்கு முந்தைய மார்கழி மாதத்தின் கடைசி நாளில் போகிப் பண்டிகையும் கொண்டாடப்படும்.

தைப்பூசம் (ஜனவரி-பிப்ரவரி)

ஒவ்வொரு மாதத்துக்கும் ஒரு நட்சத்திரத்துக்கு முக்கியத்துவம் வரும். இந்த வகையில் தை மாதத்துக்குப் பூச நட்சத்திரம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இந்த நாளில் தான் சிதம்பரத்தில் பதஞ்சலி மற்றும் வியாக்ரபாத முனிவர்களுக்கு நடராஜ பெருமான் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவ தரிசனம் அளித்தார். கடலூர் மாவட்டம் நெய்வேலி நகரம் அருகே உள்ள வடலூரில் இந்த விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திருவருட்பா இயற்றிய ராமலிங்க சுவாமிகள் சமாதியடைந்த வடலூரில் லட்சக்கணக்கான மக்கள் கூடி தைப்பூச நாளன்று ஜோதி தரிசனம் காண்பார்கள்.

இதேபோல் பன்னெடுங் காலமாக திருவிடைமருதூர் கோயிலில் நடைபெறும் தைப்பூச விழாவும் முக்கியமானதாகும். பக்தர்கள் இந்தக் கோயிலில் உள்ள புனித குளத்தில் நீராடி மகாலிங்க சுவாமியை வழிபடுவார்கள். இந்த விழா பற்றிய குறிப்புகள் திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் தேவாரங்களில் இடம்பெற்றுள்ளன. இக்கோயிலில் நாம் வழிபாடு செய்து தேவாரப் பாடல் ஒன்று பாடி வழிபடலாம், நீராடலாம்.

மலேசிய நாட்டில் கோலாலம்பூரில் பத்து மலை என்ற இடத்தில் உள்ள குகைக்கோயில் முருகனுக்கு தைப்பூசத்தன்று பால் அபிஷேகம், காவடிகள் சிறப்பாக நடத்தப்படுகின்றது. நாடு முழுவதும் உள்ள தமிழர்கள் அன்று அதிக அளவில் கூடுவார்கள்.

11. மாசி (பிப்ரவரி - மார்ச்)

மகாசிவராத்திரி

மாசி மாதத்தில் மாசிமகம் விழா மிகுந்த முக்கியத்துவம் உடையதாகும். மக நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் நாள் மகம் எனப்படும். கடற்கரையோரம் உள்ள இடங்களில் கடல் நீராடுவது மாசி மகம் விழாவின் மிக முக்கியமான அம்சமாகும். உள்ளூர் கோயிலிலும் அண்டை அயலில் உள்ள மற்ற கோயில்களிலும் இருக்கும் திருமேனி கடற்கரைக்கு ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு நல்ல நேரத்தில் சம்பிரதாய முறைப்பாடி நீராட்டு செய்யப்படும். அதேசமயத்தில் இந்த விழாவில் பங்கேற்கும் மக்களும் புனித நீராடுவார்கள். இதனைத் திருஞானசம்பந்தர் மாசிக் கடலாட்டு (தீர்த்தவாரி) என்று குறிப்பிடுகிறார். இந்த விழாவின்போது ஸ்ரீ முஷ்ணத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவராக சுவாமி தொலைதூரத்தில் உள்ள சிதம்பரம் அருகே இருக்கும் கடல் பகுதிக்கு (கிள்ளை என்று ஊருக்கு) ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படுவார். இந்த ஊர்வலத்தின்போது வழிநெடுகிலும் உள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் விழாவில் உற்சாகத்தோடும் பக்திப் பரவசத்தோடும் பங்கேற்பார்கள். இதேபோல் கடற்கரையோரத்தில் உள்ள ஊர்களிலும் மாசிமகத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த விழா கும்பகோணத்தில் மகாமக விழாவாகக் கொண்டாடப் படும். இந்த விழாவின்போது மகாமகக் குளத்தில் லட்சக்கணக்கான மக்கள் நீராடுவார்கள். புனித இந்து சமயப் புராணங்களில் குறிப்பிடப்படும் புனித நதி களானகங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, காவிரி, சிந்து, நர்மதா, குமரி, கிருஷ்ணா ஆகியவற்றின் நீர் மாசிமக நாளில் இந்தக் குளத்தில் கலப்பதாக ஐதிகம். எனவே இந்த நாளில் இங்கு நீராடுவது வாழ்க்கையின் புண்ணியமாகக் கருதப்படுகிறது. அகில இந்திய அள விலும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான விழா வாகும் இது.

மகாசிவராத்திரி விழாவும் மாசி மாதத்தில் தான் கொண்டாடப்படுகிறது. மாசி மாதத்தின் தேய்பிறை காலத்தின் 14வது நாளில் சிவபெருமான் லிங்கோத்பவராக, பிரம்மாவுக்கும் விஷ்ணுவிற்கும் காட்சியளித்தார். இதனால் இந்த நாள் இரவில் அனைத்து சிவலிங்கங்களிலும் சிவபெருமான் காட்சி யளிப்பார் என்று நம்பப்படுகிறது. யுகச் சுழற்சியின் துவக்கத்தில் முதலாவது உயிர்த் தோற்றம் இந்த நாள் இரவில் நடந்தது என்பதாலும் இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்த இரவில் மக்கள் உணவை யும் உறக்கத்தையும் தவிர்க்கிறார்கள். இரவு முழு வதையும் வழிபாட்டிலும் தியானத்திலும் செலவிடு கிறார்கள். அனைத்துச் சிவன் கோயில்களிலும் இந்த இரவில் நான்கு காலம் பூஜைகள் நடத்தப்படுகின்றன. இந்த இரவில் செய்யப்படும் பூஜைக்குரிய பலன்கள் பற்றி ஏராளமான கதைகள் கூறப்படுகின்றன. சிவ ராத்திரி தினத்தை சமணர்களும் புனித நாளாகக் கருது கிறார்கள். இந்த நாளில்தான் அவர்களின் தீர்த்தங்கர ரான ரிஷபதேவர் பரிநிர்வாண நிலையை அடைந்தார் என்று அவர்கள் கூறுகின்றனர்.

12. பங்குனி (மார்ச்-ஏப்ரல்)

பங்குனி மாதத்தில் பங்குனி உத்திர விழா முக்கியமானது. உத்தர நட்சத்திரமும் பவுர்ணமியும் சேரும் நாளில் இந்த விழா கொண்டாடப்படுகிறது. தென்னிந்தியாவில் உள்ள பெரும்பாலான கோயில் களில் வருடந்தோறும் கொண்டாடப்படும் பிரமோற் சவம் எனும் பத்து நாள் விழா பங்குனி உத்திரத்தின் போதுதான் நிறைவு பெறுகிறது. இந்த நாளில் சிவ பெருமான் பார்வதியை மணம் புரிந்ததாக ஐதிகம். மதுரையில் சொக்கநாதர் மீனாட்சியை மணம் புரிந் ததும், காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் காமாட்சியை மணம் புரிந்ததும் இந்த நாளில்தான். ராமபிரானுக் கும் சீதாதேவிக்கும் திருமணம் நடந்தது கூட பங்குனி உத்தர நாளில்தான் என்று கூறப்படுகிறது. திருவா ரூரில் 1300 ஆண்டுகளுக்கும் முன் அப்பர் பெருமானால் இந்த விழா கொண்டாடப்பட்டதாக 63 சைவ நாயன் மார்களில் ஒருவரான நமிநந்தி அடிகள் நாயனார் புகழ்ந்துரைக்கிறார். திருமயிலையிலும் கொண்டாடப் பட்டது என திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் குறிப்பிடுகிறார். 2000 ஆண்டுகளுக்கு முந்தைய சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றில் கூட பங்குனி உத்திர விழா பற்றிய குறிப்பு இடம்பெற் றுள்ளது.

சங்ககாலப் புலவர் நக்கீரரும் இந்த விழா பற்றி தமது பாடலில் குறிப்பிட்டுள்ளார். சங்ககால சோழர் களின் தலைநகரமான உறையூரில் இந்த விழா பிரபல மாக இருந்தது என்று அவர் கூறுகிறார். இத்தகைய இலக்கியச் சான்றுகள் இந்த விழாவின் தொன்மையை நிரூபிப்பதாக உள்ளன.

ஏறத்தாழ எல்லா சிவாலயங்களிலும் பங்குனி உத்திரத் திருவிழா மிகப் பிரபலமானது என்றாலும், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் இந்த விழா வெகுவிமரிசையாக நடைபெறும். இந்த ஆலயத்தில் ஏகாம்பர நாதருக்கும் காமாட்சியம்மனுக்கும் திரு மணம் நடைபெறும். அதே நேரத்தில் ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்த பல ஜோடிகளுக்கும் சிறப் பான முறையில் திருமணங்கள் நடைபெறும். தற் காலத்தில் ஒரே சமயத்தில் ஏராளமான ஜோடிகளுக்கு ஒரே இடத்தில் திருமணம் நடத்தி வைக்கப்படும். இன்றைக்கு முன்னோடியாகத் தொலைநோக்கோடு நமது முன்னோர்கள் பன்னெடுங்காலத்துக்கு முன்பே இப்படிப்பட்ட சமயஞ்சார்ந்த, சமூகம் சார்ந்த வழக் கத்தை சிந்தித்திருக்கிறார்கள் என்பது இதன் மூலம் தெரிகிறது.

முடிவுரை

இக்கட்டுரையில் எந்த கோயிலில் எந்தவித மான பண்டிகை மற்றும் உற்சவம் விசேஷமாக கொண் டாடப்படுகிறது என்றும், அதுசமயம் பக்தர்கள் அந்த ஆலயங்களுக்கு செல்வதற்கு ஏதுவாக முழுத் தகவ லும் தரப்பட்டுள்ளது. ஆன்மீக அன்பர்கள் பய னடைய கேட்டுக்கொள்கிறோம்.

★★★

ஒன்றியிருந்து நினைமின்கள்

- மயிலை சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்

இறைவனின் தியானம் மனதினைக் கட்டுப் படுத்தும்; இறைவனின் திருவடிப் பேரின்பம் அடைய உதவும். உயிரை, உணர்வுகளைப் பண்படுத்தும். உண்மை இன்பமாம் அமைதியை அளிக்கும். ஐந்து புலன்களுக்கும் இரை போடுவதும், இரை ஆவதுமாம் நிலைமை நீங்கி, தியாகம், அன்பு, பக்தி, பண்பு கொண்டால் தியானம் சிறப்படையும். தியானத்தின் பலன்கள் பலப்பலவாம். பலன்களால் பரமனின் திருவடிப் பேரின்பமே! தியானம் என்பது ஒன்றே. உருவதியானம் ஆயினும் அருவ தியானம் ஆயினும் தியானம் என்பது ஒன்றே. கவனம் சிதறாமல் ஒன்றி, ஒன்றில் நிலைத்தால் தியானத்திற்கு உரிய தகுதியைப் பெறலாம். மனதின் ஆசைத் துடிப்பினை அடக்கி மனதில் உறுதியுடன் புலன்களை அடக்கி, இறைவனை சரணாகதியாகி மனதில், இதயத்தில் ஒன்றி விட்டால் ஜீவசிவ ஐக்கியம் உண்டாகும்.

தியானம் செய்வதால் நன்மைகள் பலபல வாகும். தியானம் செய்வதால் உடலும் பளபளப் பாகும். அவரவர் தாய்மொழியில் பொருள் புரிந்து பிரார்த்தித்து தியானம் செய்வதே சிறப்பாகும். சிவனை மறவா நிலையே தவ யோகமாகும். நான் உன் குழந்தை; நீயே என் தாய் தந்தை என்று உருகி அழுது உறவு சொல்லி இல்லற வாழ்விலிருந்தே ஐந்தெழுத்தோதி தியானம் செய்திடணும். சரணாகதியாகி தியானம் செய்திடணும்.

பசி மறந்து, தாகம் மறந்து, தன்னை மறந்து, காலம் மறந்து மனதில் லயித்து இதயத்தில் இறைவனை இருத்தி தியானம் செய்திடணும். பேச்சும் மூச்சும் பரமன் நினைவாகிப் பேசிப்பழகி சதா நேரமும் மனதில் தியானம் செய்யணும். இறைவனின் நாம சங்கீர்த்தனத்தில் தன்னை மறந்து லயித்து பிரார்த்தனை செய்திடணும். தர்ம சிந்தனையுடன் பெற்றோரை மதித்து, உண்மையை பேசி, குருவையும் மதித்து தியானம் செய்திடணும். தன் தவறை உணர்ந்து பிறர் தவறை மறந்து, திருந்தி செய்திடும் பிரார்த்தனையும் தியானமும் பலன்தரும். சுயநலம் இன்றி சுய நினை வுடனே சுவயம்பு ஜோதியை சுவயமாக நினைத்து தியானம் செய்திடணும். இருக்கும் இடத்தில் இருந்து இறைவனை நினைத்து இயற்கையை ரசித்து இறைவ னின் குணம் கொண்டால் பிரார்த்தனையும் தியானமும் நிச்சயம் பலன்தரும். ஆன்ம நேயமும் மனித நேயமும் கொண்டு தியானம் செய்யணும். பூனைக்குட்டி போல் சிறிதும் கவலை இன்றி பூரண சரணாகதியாகிப் பிரார்த்தனை செய்திடணும். பிரார்த்தனை தியானம் செய்து, எப்படிக் கடவுளை அடைவதெனக் கேட்பவர் களுக்கு, நான் கூறுவது அனுபவமான பிரார்த்தனை, தியானம், அடியேன் கூறும் பாதையில், செலவில்லை. சிரமம் இல்லை. பயம் இல்லை. பகை இல்லை. தடை இல்லை. ஆனந்தப் பேரின்பம் எல்லை இல்லை. இறைவனைத் தேடும் அன்பர்களுக்கு, இறைவன் நம்மைத் தேடி வந்து, நாம் கண்டு, கலந்து ஆனந்திக்கும் வழி முறைகள் கூறுகின்றேன்.

ராகம் :- ஹம்ஸானந்தி தாளம் :- ஆதி

பல்லவி

தேடித் தேடி இறைவனைத் தேடி
அலைந்திடும் அன்பர்களே வாருங்கள்
கண்ணை மூடிக் கடவுளைக் காணும்
வழியினைக் கூறுவேன் கேளுங்கள்

அனுபல்லவி

உள்ளம் நெகிழ்ந்து உருகி உருகி
உண்மையாக உறவாடு
இஷ்ட தெய்வத்தை இதயத்தில் இருத்தி
இரவும் பகலும் துதிபாடு (தேடி)

சரணம் - 1

கண்ணை மூடிக் கருத்தினில் இருத்தி
இதயத்தில் இறைவனை பார்த்து விடு
இதயக் கோயிலில் இருத்திய இறைவனிடம்
இனிய பாசத்தை வளர்த்துவிடு
ஆசையை அளவுடன் அடக்கி விடு - நல்
குணங்களை நாளும் பெருக்கிவிடு
கடமையைக் கருத்துடன் செய்துவிடு
கனிவுடன் அன்புடன் நடந்து விடு
ஆத்ம ஜோதியைக் கண்டு விடு - பர
மாத்ம ஜோதியினுள் கலந்துவிடு
பேரானந்தம் பெற்றுவிடு - நீ
பேரின்ப சிவன் நிலையை அடைந்துவிடு
(தேடி)

சரணம் - 2

பிறவியால் வந்த பிணியினை போக்குபவன்
மருத்துவன் மனித மருத்துவன்

திருவண்ணாமலை திருக்கார்த்திகைத் தீபதரிசனப் பலன்

''கார்த்திகைக்குக் கார்த்திகைநாள் ஒருஜோதி
மலைநுனியில் காட்டா நிற்போம்
வாய்த்தஅந்தச் சுடர்காணில் பசிப்பிணிஇல்
லாது உலகில் மன்னி வாழ்வார்

பார்த்திவர்க்கும் அருந்தவர்க்கும் இடையூறு
தவிரும்அது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தில் இருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரம் கொடுப்போம்'' என்றார்.

- *அருணாசல புராணம்*

புத்திதரும் தீபம் நல்லபுத்திர சம்பத்து முதல்
சித்திதரும் தீபம் சிவதீபம் - சத்திக்கு
உயிராகும் சோணமலை ஓங்கிவளர் ஞானப்
பயிராகும் கார்த்திகை தீபம்.

- *கார்த்திகை தீப வெண்பா.*

பிறவிப் பணியினையே வேரற போக்குபவன்
தேவ மருத்துவன் மகாதேவன்
மருத்துவனை சரண் அடைந்து விடு - சிவ
நாம மருந்தினை அருந்தி விடு
நாமம் நாளும் சொல்லிவிடு - பேர்
இன்பம் பெருகும் கண்டு விடு

மருத்துவர்க்கெல்லாம் மருத்துவன் ஆவான்
மஹாதேவன் சம்போ மஹாதேவன்
எந்த மருத்துவனை சரண் அடைந்தாலும்
மகா மருத்துவனைக் காட்டிடுவான் (தேடி)

பிரார்த்தனை, தியானம் இவை அழியா சொத்தாம்; எவரும் பறித்துக் கொள்ள முடியாத சொத்தாம், இறைவனின் பேரன்பு, பேரறிவு, பேராற்றல் வந்து பொருந்தும். தியானத்தினால், 'பிரார்த்தனையினால், அன்பு, பண்பு, இன்பம், அமைதி, சாந்தி, நிம்மதி ஆன்ம சுகமாம். ஆனந்தம், ஏகானந்தம், பரமானந்தம் உண்டாகும். காலையும் மாலையும். சூரியனும் சந்திரனும் சேரும் பிரதோஷ காலத்தில் இறைவனை வணங்கு. தூய்மையான மனதில், பக்தி, அன்பு, பண்பு முதலிய விதைகளை நாம் ஊன்றினால், அந்த விதைகள் முளைவிட்டு துளிர்விட்டு கிளைவிட்டு, பூத்துக் காய்த்து, பழுத்துப், பழமாகி, பழம் பக்குவமாகி, ஞானப்பழமாகி, இறைவன் விரும்பும் அன்புப் பழமாகி, ஆனந்தப் பழமாகி, அருட் ஜோதிப்பழமாக வேண்டும். பிறவா இறவா பேரானந்தப் பழமாக வேண்டும். சிறந்த பிரார்த்தனையால் நமக்கு அகப்படுவது பேரன்பென்னும் பரம் பொருளாகும். பிறப்பு இறப்பு அற்ற பேரின்ப இறைவனாம், பேராற்றலாம், பேரன்பாம், பேரறிவாம் பரம்பொருள் நம்மைத் தேடி வந்து கூடி, ஆனந்தக் கூத்தாடி கோடி கோடி பேரின்பம் அருளும். சிவ சாயுஜ்யம் பெறலாம்.

இறைவனை பிரார்த்தனை செய்வதாம் ஞானம் மூன்று வகைப்படும். அவையாவன. 1. பாசஞானம் 2. பசு ஞானம் 3. பதி ஞானம் எனப்படும். வேதம், சாத்திரம், புராணம், மந்திரம், பூஜைகள், ஹோமம், சம்பிரதாயங்கள், இவைகளினால் கடவுளை பிரார்த்தனை செய்வது பாசஞானம். இது பாசபந்தமான பிறவியினைத் தரும். மாயா காரியங்களாகிய, பாச ஞானப் பொருள்களின் தன்மைகளை அருவில் உணர்ந்து, தான் இவற்றின் வேறான பொருள் என்பதை மட்டும் உணர்ந்து ஆத்மபந்தத்தின் வேறுபட்ட அறிவு சொரூபமான பொருள் தான் என்பதை மட்டும் உணர்ந்து 'நானே பிரும்மம்' என்று செருக்குற்று நிற்றல் பசு ஞானம். பசு ஞானத்தையும் அகற்றி, இறைவனது திருவருளில், இறைவனாகிய பதியை உணர்ந்து கலந்து இறைவனது திருவடியின் கீழ் நின்று திருவடிப் பேரின்பத்தை உணர்ந்து, உலகுக்கு உரைத்தல், திருவடிப் பேரின்பமாம், பிரும்ம ஞானமாகிய, சிவஞானமாம், பதிஞானமாகும்.

திருவடியில் சரணாகதியாகி, இறைவா எனக்கு ஒன்றும் புரியவில்லை, ஒன்றுமே தெரிய

வில்லை, ஒன்றுமட்டும் புரிகின்றது. அது நீயே என் தாய் தந்தை, நானே உன் குழந்தை. நீயே நானாகி மகிழ்ந் திடும் ஆனந்தம் நீயே எனக்குத் தந்த அனுபவப் பேரின்பம் என்று ஆணவம் இன்றி அடக்கமாக அன்புடன் உருகி, ஜோதியுள், சரணாகதியாகி அடங்கி பிரார்த்தனை செய்திடணும்.

அம்மை அப்பா! நீ தானே வந்து அணைத்து எனக்குத் திருவடிப் பேரின்ப அமுது அளித்ததால், என்னைப் போலவே மற்ற உன் குழந்தைகளும், அம்மை அப்பனாகிய, உன்னை அடைய, நான் அழைத் தால் வந்திடும் அருள் தாராய்! அடியேன் உரைத்தால் உணர்ந்திடும் அருள் தாராய்! என் அம்மை அப்பா அடியேன் கரைந்துண்ணும் காக்கைப் போல் கரை கின்றேன். பகிர்ந்துண்ணும் காக்கைபோல் பகர்கின் றேன் என்று உருகி கண்ணீர் விட்டு, திருவடியில் கலந்த பின்பும் பிரார்த்தனை செய்திடணும். அடிக்கடி அல்ல. ஒரே ஒருமுறை பிரார்த்தனை செய்து பாடினால் போதும். இறைவனருளில் அழைத்தாலும், உரைத் தாலும், மற்ற குழந்தைகள் புரிந்து கொள்கின்றனர். ஞான விழிப்பைத் தூண்டி விடுவதற்குத்தான் அடி யேன் இறைவனருளில் அழைக்கின்றேன்.

ராகம் : - ஆனந்தபைரவி தாளம் : - ஆதி

பல்லவி

யாருக்கு யார் என எழுதியவன் - என்னைத்
தன் குழந்தை என்று அணைத்தானடி

அனுபல்லவி

'தானாக்கிப் பேரின்பம் தந்தானடி
தானே தவம் யோகம் செய்தானடி'

சரணம் - 1

சிவனை அடைதல் ஆத்ம யாத்திரையாமடி
பிறவி எடுத்தல் தேக யாத்திரையாமடி
ஆத்ம யாத்திரையும் முடிந்தடி - இனி
தேக யாத்திரையும் முடிந்ததடி - இந்த

''சர''ணம் 2

கூடுவிட்டு உயிர் போன பின்னே - நம்
கூடவே யார்தான் வருவாரடி
கூற்றுவனை அஞ்சி ஓடோடச் செய்திடும்
கூத்தன்தான் கூடவே இருப்பானடி - சிவக்
கூத்தன்தான் கூடவே இருப்பானடி

சரணம் - 3

புருவ நடுவினில் வந்தானடி
அருவ ஜோதியாக அணைத்தானடி
தருணத்தில் தாயாக அணைத்தானடி - இது
அருட் பெருஞ் ஜோதியின் சிறப்பாமடி - அன்பு
அருட் பெருஞ்ஜோதியின் சிறப்பாமடி,
(யாருக்கு)

எல்லா ஆத்மாக்களும், ஒரே பிறவியில் பக்கு வம் அடைவதில்லை. ஆன்மா அழிவில்லாதது. ஆன்மா வசிக்கும் வீடாம் உடல் மட்டுமே அழி வுள்ளது. பரமாத்மா சுவயம் பிரகாசம் ஆனது. அழி வில்லாதது. பரமாத்மாவை பிரிந்த நாம் ஆத்மனை நன்றாக உணர்ந்து, பரமாத்மாவை உணர்ந்து, ரசித்து, சுவயம்பிரகாசமாம், சுவயம்புவாம் அழிவில்லாத ஆனந்த ஜோதியுடன், அழிவில்லா நிலையான ஆனந்த ஆத்மனாகக் கலந்து கரைந்திடல் வேண்டும். ஆசை யின் அளவு எத்தனையோ சுக துக்கத்தின் அளவும் அத்தனையாகும். எண்ணங்கள் பிறவி அன்றோ! வரும் பிறவி நம் கையில் அன்றோ! எண்ணங்கள் தெய்வீகம் ஆனால் தெய்வப் பிறவியும் அன்றோ! ஆசைக்குக் காரணம் பிறவிக்குக் காரணம், ஆசையை அடக்காமல் அடக்கி விடு. ஆசைகளை அடியோடு அடக்கிவிட்டால் உன் கடமைகளை எவ்வாறு செய்வாய். ஆசைகள் யாவும் அனுபவிக்கத்தான் இறைவன் படைத்துள்ளான். அனுபவிக்கத்தான் வேண்டும் இறைவன் நமக்கு ரசிக்க, ருசிக்க எல்லாவித வசதிகளும் படைத்துள்ளான். ஆசை என்னும் சுவைகளை சுவைக்கத்தான் வேண்டும். ஆனால் அந்த சுவைகள் நம்மை சுவைத்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆசை என்னும் கடலில் மிதக்கத்தான் வேண்டுமே தவிர, மூழ்கி விடக் கூடாது. மூழ்கி விட்டால் கரையேறுவது எப்படி? இல்லற வாழ்விலிருந்து, இறைவனின் நாமம் சொல்லி, மிதந்து வந்தே எல்லா சுவைகளையும் அனுபவித்துக் கொண்டே, பஞ்சபூத சுவைகளை அடக்காமல் அடக்கி, பஞ்ச இந்திரியங்களை, ஆத்மன் கடக்கணும். அளப்பரிய முயற்சியினால் அனுபவத்தால் ஆத்மாவை அறியலாம். ஆத்மனை அறிந்து பரமாத்மனை அடைந் திட மனிதப் பிறவியே சிறந்த பிறவி. பரிசுத்தமான ஞானம் கிடைக்கக் கூடிய தகுதி மனிதனுக்கே. மனிதப் பிறவியின் பயனே இறைவனை மருவி மகிழ்ந்திடும் திறனே.

ராகம் :- சிந்து பைரவி தாளம் :- ஆதி

பல்லவி

மனிதப் பிறவியின் பயனே - இறைவனை
மருவி மகிழ்ந்திடும் திறனே

அனுபல்லவி

மனிதராய்ப் பிறப்பது அரிது - இதில்
இறைவனை அடைவது அறிவு (மனித)

சரணம் - 1

அபூர்வ செல்வமாம் அறிவு - நம்
ஆண்டவன் அளித்த ஆறாம் அறிவு
ஆறாம் அறிவாம் மனிதப் பிறவியின்
ஆறாம் நிலையே ஞான அறிவு
ஆறாம் நிலையாம் ஞானக் கண்ணிலே
ஆறுமுகனைக் கண்டு மகிழ்வது அறிவு (மனித)

ஆத்மாவை அறிந்தோர் யார்?

- கவிஞர் செ.பொ. சொக்கலிங்கம்

"தான்" எனும் மாயையில்
தடுக்கியே விழ்ந்தோர்,
தான், தான் அறிவில்,
தனத்தில், இனத்தில்,
தான், தான் தலையென,
தனக்கென வாழ்வோர்,
"தான்" எனும் நெருப்பில்,
தன்னாத்மா தொலைத்தோர்! (1)

ஒருதுளி நீரில்,
ஒருகடல் காண்போர்,
ஒருவிதை ஒன்றில்,
ஒருமரம் காண்போர்,
ஒருஉயிர் ஒன்றில்,
ஒருஇறை காண்போர்,
உருவினில் ஆத்மா,
ஒன்றிடக் காண்பார்; (2)

கலைகளில் வாழ்வின்
கருவினைக் காண்போர்,
அலைகளில் உயிரின்
ஆள்வினை காண்போர்,
மலைகளில் மாந்தரின்,
மனத்திடம் காண்போர்
அறியாத ஆத்மாவின்
அந்தரங்கம் அறிந்தோர். (3)

சரணம் - 2

கண்ணின் மணியாகக் கந்தன் - நம்
கண்ணிலே பாது காவலனாய் இருக்க
கருத்தும் மாறி கருவும் மாறி
கருமாரி அம்மனாய் ஏழாம் நிலையில்
சிவனையே பதியாய் சிவதியானம் செய்து
அருட் பெருஞ் ஜோதியாம் சிவ ஜோதியாவது அறிவு
(மனித)

மெய்யான உடலைப் பொய்யென்று நம்பி, பொய்யாகப் போய்விடாதீர்கள், மெய்யான உடலை மெய் என்று நம்பி, மெய்யுடலில் மெய்ப் பொருளைக் கண்டு, மெய்யுடன் கலந்து, மெய்சிலிர்த்து, மெய்ப்பொருள் மகிமையை மெய்யுடலில் உணர்ந்து, ரசித்து, மகிழ்ந்து, மெய்யுடலில் இருந்து கொண்டே, மெய்யின் மகிமையை, மெய்யுலக மக்களுக்கு மெய்யாக உரைக்க வேண்டும்.

வாழ்ந்து மடிய நாம் பூமியில் பிறக்கவில்லை. வாழ்ந்து சாதிக்கத்தான் வந்துள்ளோம். ஆழ்ந்து உறங்கும் ஆத்மனின் ஞான உணர்ச்சியை, அறிவுணர்ச்சியை விழிப்படையச் செய்திடவே வந்துள்ளோம். ஞான விழிப்பு வந்தால் ஆன்ம விடுதலை நிச்சயம். ஆன்ம ஜோதி, ஞான ஜோதியாகி, சிவப் பெருஞ் ஜோதியாகி மகிழ்ந்தாடனும். ஆத்மநிவேதனமே மாபலியாகும். ஆத்மசமர்ப்பணமே மாபலியாகும். மனம், வாக்கு, காயம் என்னும் முப்பாலும் தாண்டுவதே மூவடி மண்தானமாம் மாபலியாகும்.

மண்ணாம் உடலைக் கடத்தல், மண் உலகைக் கடத்தல், மண்ணாம் உடலில் உள்ள போதே, இவ்வுலகினில் உள்ள போதே இறைவனை அடைந்து ஆனந்தம் அனுபவிக்க வேண்டும் என்று நம் தாய் தந்தையாம் இறைவன் விரும்பி, உடலில் உணர்வுகள் உள்ள போதே இவ்வுலகில் கலந்து கொண்டு, சிரசைத்தாங்கி கபாலத்தைத் தாங்கி, பவனி வந்து, ஒளி உடலாக்கி, தானே தவம் யோகம் செய்து தானாக்கி மகிழ்கிறார். குழந்தையை மகிழ்விக்கிறார். தாயும் சேயும் இரண்டில்லை என்று ஒன்றாகிக் கலந்து மகிழ்வதே அத்வைதப் பேரின்ப நிலை ஆகும்.

பக்தி யோகத்துடன் கூடிய பிரார்த்தனை, தியானம் பற்றிப் பலவிதமாகக் கூறியுள்ளேன். இத்துடன் கூட இல்லறவாழ்வினில் இருந்து, ஐந்து புலன்களில் இயங் கிடும் பஞ்ச பூதங்களினால் நல்லதைச் செய்திட முயற்சி செய். கெடுதலை தவிர்த்திட முயற்சி செய், இரண்டும் செய்ய முடியாவிடில், வஞ்சம் இன்றி, பலனைப் பாராது. உன் கடமையை செய்திடு. இதுவே சிறந்த கர்ம யோகம். இறைவனின் நினைப்பும் இல்லறத்தில் அயரா உழைப்புமாக, பக்தியோகம், கர்ம யோகத்தால், ஞானம் பிறக்கும். ஆணவம், கன்மம், மாயை விலகும். இறைவனை ரசித்து உருகி, பலனைப்பாராத இறைவ னது குணத்தினை நம் குடும்பத்திலாவது கொண்டு கடமையை செய்து, பலனைப் பாராது, இறைவனை உருகி வேண்டி ரசித்து இறைவனை அடைவதையே இலட்சியமாகக் கொண்டு ஆன்மாவின் விடுதலையே இலட்சியமாகக் கொண்டு இல்லறக் கடமை செய்வது சிறந்த ஞான யோகம் ஆகும்.

"ஈசனைப் பணிவார்க்கு இல்லை எமபயம்"

- கவிஞர். ச.க. ஏகாம்பரம், எம்.ஏ., பி.எட்.



நமச்சிவாய என்கின்ற நாமத்தைச் சொன்னால்
இமைப்பொழுதும் நேரா திடரே – நிமலனடிப்
போற்றி பணிகின்ற அன்பு மனமிருந்தால்
போற்ற அமையும் புகழ்.

மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அவனன்றி
வாழ வழியொன்று வாய்த்திடாது – சேயன்
சிவனடியை சிந்திப்பார் சிந்தையுள் தோன்றி
அவனியில் சேர்ப்பான் அழகு!

பிறப்பறுக்கும் பெம்மானைப் போற்றிப் பணிவார்
பிறப்பினில் இல்லைப் பிழைகள் – புறம் நின்று
காக்கும் கருணைக் கடலாம் அவன்தாளே
ஊக்கம் தருமாம் உனக்கு!

முந்தை வினையெல்லாம் முன்னின்று போக்கிடும்
தந்தை அவன்தாள் துணையாகும் – சிந்தை
மகிழ்ந்திடவே சீரெல்லாம் சேர்க்கும் சிவனின்
புகழினும் ஏது புகழ்!

ஈசனடி போற்றிப் பணிவார்க்கே நன்றாற்றும்
நேசனாய் நின்று நலமருள்வான் – நேசனடி
கண்டு களித்திட்டால் காலமெல்லாம் இன்பமல்லால்
துன்பம் தொடரா துனக்கு!

எண்ணுதற்கெட் டாத எழிலுருவை மெய்யுருக
பண்ணிசைத்தால் கேட்டுப் பணிந்திடுவான் –
மண்ணோர்க்கும்
விண்ணோர்க்கும் எட்டா விமலவனை அன்பென்னும்
மென்மையால் வெல்வார் மனத்து

பொல்லா வினைகள் பொடிப்பொடியாய் போய்விடுமே
வல்லான் அவனருளே வாய்த்திட்டால் – கல்லா
மனிதனுக்கும் அன்பு மனமிருந்தால் போதும்
இனித்திருக்கும் வாழ்க்கை இனிது.

அத்தனே நின்னை அடிபணிந்து காண்கின்ற
பத்தியே போதும் பிழைத்திடுவேன் – சித்தம்
தெளிகின்ற இன்பமெனும் தேனிலே ஊறித்
திளைக்கின்ற அன்பினைத் தா!

பொய்யான வாழ்வை புகழ்ந்துரைக்கும் பேதைதான்
மெய்யாக எண்ணி மதிமயங்கும் – உய்யும்
வகையறிந்து வாழ்கின்ற வல்லமை வாய்த்தோர்
நகைத்திட வாழார் நலிந்து.

அஞ்ஞானம் விட்ட கலவே அருளென்னும்
மெஞ்ஞானம் செய்வாய் மனமுருகி – எஞ்ஞான்றும்
உன்னை மறவாத உள்ளமொன்று போதுமே
உன்னில் கலப்பேன் உவந்து!

* * *

முருகனின் அவதாரங்கள்

- டாக்டர். டி. செல்வராஜ்

அவதாரம் - கீழிறங்குதல். ஏதோ ஒரு காரணத்திற்காக மேலான பரம்பொருள் கீழிறங்கி இவ்வுலகில் அவதரித்து, தீயவர்களை ஒடுக்கி, தீயவைகளை ஒதுக்கி நல்லவர்களுக்கும், நல்லவைகளுக்கும் அருள் சுரப்பது அவதாரம்.

வைணவத்தின் பரம்பொருளான திருமாலின் அவதாரம் பத்து. கௌமாரத்தின் பரம்பொருளான மால் மருகன் முருகனின் அவதாரம் இரண்டு என்பர். அவை : 1. உருத்திரசன்மன் 2. திருஞான சம்பந்தர்.

1. உருத்திர சன்மன்

இவன் முருகனின் அவதாரம் என்று நக்கீரர் இறையனார் அகப் பொருள் உரையில் குறிப்பிடுகிறார்.

உப்பூரிகுடி கிழாரின் ஐந்து வயது மகன் உருத்திரசன்மன். இவன் ஊமை. ஒரு சாபத்தினால் ''குமார தெய்வம்'' உருத்திரசன்மனாக அவதரித்தார்.

இறையனார் அகப் பொருளுக்குப் புலவர் பலர் உரைவரைந்தனர். இவற்றில் சிறந்த உரையைத் தெரிவு செய்வது உருத்திரசன்மனின் பொறுப்பாயிற்று. இவன் முன் புலவர் பிறர் தாம் எழுதிய உரைகளைப் படிக்கின்ற போது சும்மா இருந்தான். நக்கீரர் உரையை அரங்கேற்றுகின்ற போது, மகிழ்ச்சியால் கண்ணீர் வடித்தும், மெய்ம்மயிர் சிலிர்த்தும் இதுவே சிறந்த உரை எனத் தேர்ந்தெடுத்தான்.

ஆகவே, இறையனார் அகப் பொருளுக்குத் தோன்றிய போலியுரைகள் போயொழியச் சிறந்த நக்கீரர் உரையைத் தெரிவு செய்தவன் உருத்திர சன்மன்.

2. ஞானசம்பந்தர்

அ) முருகனின் அவதாரமே திருஞானசம்பந்தர் என்று முதல் முதல் சுட்டிக்காட்டியவர் ஒட்டக் கூத்தர். இவர், தக்க யாகப்பரணியில் (பாடல்கள் 169-221) திருஞான சம்பந்தரின் அரிய செயல்களைத் தொகுத்துரைத்து இவர் முருகனின் அவதாரம் என்று முடித்தார்.

ஆ) அருணகிரிநாத சுவாமிகளும் திருப்புகழில் (பாடல் 919), திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புத நிகழ்ச்சிகளை முருகன் இயற்றிய திருவிளையாடல்களாகவே புனைந்து பாடுகின்றார்.

இ) சிதம்பர சுவாமிகளும்,

1. பொற்றாளம் பொற் சின்னம்
பொற்பார் சிவிகையொடு
நற்றரளப் பந்தரையும்
நம்பர்கையில் பெற்றானோ?

பொருள் : தரளம் = முத்து; நம்பர் = சிவ பெருமான். சிவிகை = பல்லக்கு.

முருகன், பொன் தாளத்தையும், பொன் சின்னத்தையும், பொன் பல்லக்கையும், நல்ல முத்துப் பந்தலையும் சிவபெருமானின் திருக்கைகளினால் பெற்றுக் கொண்டவனோ?

மயிலை நகர்தன்னில்
வன்னியடும் என்பைக்
குயிலை நிகரும் மொழிக்
கோதையாச் செய்தானோ?

பொருள் : வன்னி = நெருப்பு; என்பு = எலும்பு.

திருமயிலாப்பூரில், நெருப்பு சுட்டெரித்த அங்கம் பூம்பாவையின் எலும்புகளை (மந்திரத்திருப் பாடல் களைப் பாடி)க் குயில் போலப் பேசுகின்ற அந்த அங்கப்பூம்பாவை எழுந்தருளும்படி செய்தவன் முருகனோ?''

என்று திருஞானசம்பந்தரின் வரலாற்று நிகழ்ச்சிகளை முருகனின் அற்புதத் திருச் செயல்களாகப் போற்றினார்.

மேற்குறித்த சான்றோர்களின் அருளுரைகளால் திருஞான சம்பந்தர் முருகனின் அவதாரம் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மேலும், உமையம்மை தம் மகன் முருகன் திருஞான சம்பந்தராக அவதரித்ததால், இவருக்கு ஞானப்பாலை அளித்தார். ஞானப்பாலைத் திருஞான சம்பந்தருக்கு மட்டும் உமையம்மை அளித்ததால் இவரே முருகனின் அவதாரம் என்பது முடிவாகின்றது.

ஆனால், நம்பியாண்டார் நம்பிகளோ, சேக்கிழார் சுவாமிகளோ முருகனின் அவதாரம் திருஞானசம்பந்தர் என்ற கருத்தை எங்கும் குறிப்பிடவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

முருகன், இறையனார் அகப்பொருளுக்குச் சிறந்த உரையைத் தேர்வு செய்ய உருத்திர சன்மனாகவும், முத்தமிழுடன் பக்தித்தமிழையும் பரப்பத் திருஞான சம்பந்தராகவும் அவதரித்தான். தமிழ்க் கடவுளான முருகனின் அவதாரங்களும் தமிழுக்காகவே நிகழ்ந்தன.

மூர்த்தி, தலம், தீர்த்தம்

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

என்பார் தாயுமான சுவாமிகள்.

முக்திக்குத் தடையாக இருக்கும் மும்மலங்களை எரித்து மானிடப் பிறவியை உய்விக்கும் முழுமுதற் கடவுளாகிய சிவன் கோயில் கொண்டுள்ள புனிதத்தலங்களுள் காசித் தலம் இம்மூன்றாலும் தனிச் சிறப்பு பெற்றுள்ளது. இத்தகு சிறப்புவாய்ந்த காசியை அடியேனும், என் மனைவியும் சென்றுவர உத்தேசித்து, கடந்த நவம்பர் 29-ம் தேதி திங்கள் வாரணாசிக்கு புகைவண்டி மூலம் பயணமானோம்.

இந்தியா மட்டுமின்றி, அமெரிக்க, கம்போடியா போன்ற நாடுகளிலும் சிவ லிங்க வழிபாடு பரவியிருந்தமைக்கு, மாணிக்கவாசகரே

''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''

எனப் பாடியுள்ளமை சான்று.

வாரணாசியை 31.10.2001 அன்று அடைந்தோம். இத்தலம் 'உ.பி.'யில் உள்ளது. கண்ணன் பிறந்த மதுராவும், இராமர் பிறந்த அயோத்தி யும் பாண்டவர்கள் ஆண்ட அஸ்தினாபுரமும் உ.பி.யில் தான் உள்ளது. காசிமுத்தி தலங்களில் ஒன்றாகும். 12 ஜோதிர்லிங்கங்களுள் ஒன்றாகும்.

பண்டைய நாளில் காசிக்குச் செல்லப் போக்குவரத்து வசதிகள் இல்லாததால், கால்நடையாகப் போவார்கள். வழியில் திருடர்கள் பயமும், உடல் நலத்தாலும், மொழிப் பிரச்சினைகளாலும் பல இன்னல்களுக்கு ஆளாக நேரிடுவதை, 400 வருடங்களுக்கு முன்னரே, நடைப்பயணமாக செல்லும் அடியார்கள் திருப்பனந்தாள் மடத்தில் பணத்தை செலுத்தி, காசியில் குமர குருபரர் மடத்தில் பெற்றுக்கொள்ள அன்றே வசதி ஏற்படுத்தியிருந்தது. இதற்கு ''தரிசன உண்டியல்'' எனப் பெயரிடப்பட்டது. இன்றைய நாளில், உள்ளூரிலேயே பணத்தை வங்கியில் செலுத்தி, வேற்றூருக்கு வங்கிவரைவோலை பெற்றுச் செல்லும் வசதிகளுக்கு முன்னோடியாக நம் முன்னோர்கள் பழக்கத்தில் கொண்டிருந்தனர் என்பதை நினைத்தாலே உள்ளம் மகிழ்கிறது.

இன்றைய நாளில் சொல்வழக்கில் காசி ராமேஸ்வரம் எனக் கருதப்பட்ட போதிலும், காசி, கன்னியாகுமரி என்று கருதுவதுதான் மரபு. இதனைப் பற்றி சிலப்பதிகாரம், மணிமேகலையில் காணலாம். அப்பர்தேவாரம், ''கங்கை ஆடில் என், குமரி ஆடில் என்'' கூறுகிறது. வடக்கே மூன்று ஆறுகள் கலப்பதற்கு இணையாக தெற்கேயும் கன்னியாகுமரியிலும் 3 கடல்கள் கலக்கின்றன. இதனால் வடக்கும் தெற்கும் மக்களால் இணைக்கப்படுவதே இத்தல யாத்திரையின் நோக்கம் ஆவதை அறியலாம். இதனை உறுதி செய்ய, அரு. சோமசுந்தரனார் ''காசி முதல் குமரி வரை உனது எல்லையே, கால் நடந்து வந்தவருக்கு கவலை இல்லையே'' எனப் பாடியுள்ளமை கவனிக்கத்தக்கது.

1.11.2001 வியாழனன்று காலை கேதாரகட்டத்தில் ஸ்நானம் செய்து விட்டு, கேதாரீஸ்வரரை எங்கள் கையினாலேயே அபிஷேகம் செய்தது, கிடைத்தற்கரிய பாக்யமேயாகும். அங்குள்ள குமரகுருபரர் மடத்துக்குச் சென்று குமரகுருபரர் பாடிய சகலகலாவல்லி பாடல்களைப் பாடினேன். என்னையுமறியாது கண்களில் நீர்மல்கியதைக்கண்ட ஏனையோர் காரணம் கேட்டனர் - விளக்கமாகக் குமரகுருபரர் சரிதத்தைச் சுருங்க சொன்னேன்.

குமரகுருபரர் தலயாத்திரையின் போது, காசிக்கு வந்ததும், மடம் நிறுவ முகலாய அரசரிடம் நிலம் கேட்டார். ஹிந்தி தெரியாத அவர் இவரை சிறிதும் பொருட்படுத்தாது அனுப்பியதும், ஸரஸ்வதியை துதிசெய்து, சிங்கத்தின் மேல்ஏறி, அரசனிடம் ஹிந்தியில் பேசியதும், அரசனே வியந்து, வேண்டுவேனவற்றை கேளுங்கள் தருகிறேன் என்று கூறத் தனக்கு மடம் கட்ட நிலம் தேவை என்றார். எவ்வளவு என்று கேட்டதும், என்றுமே பறக்காத கருடன் ஆகாயத்தில் பறந்து சுற்றி வந்ததைக் கண்டு அரசன் அவ்வளவு பரப்பு நிலத்தையும் தந்தான் என்றே கூறினேன்.

அன்று மாலை அருத்தஜாம பூஜைக்கு சென்றோம். இரவு திரும்பும்போது மணி 10.30க்கு மேல் ஆகிவிட்டது. ஒரே இருட்டு. பயந்தோம். காசி என்றால் ஒளி என்று பொருள். ஆனால் இருட்டாக இருந்ததை

நினைத்து, காசிமயானத்தில் நடனம் புரிவதை யாவரும் பார்க்கக் கூடாது என நினைத்து, மின்விளக்குகள் எல்லாம் எரியாது செய்துவிட்டானோ என்னவோ?

மேலும் பிரகாரத்தில் வலம் வரும் சமயம் பிரகாரத்தில் தரையிலே வெள்ளிக்காசுகளையும், பொன் காசுகளையும் பதித்து இருந்ததைக் கண்டதும், என்னுடன் வந்த அடியார்கள் இது என்ன அதிசயம்? லட்சுமியை காலில் மிதிக்கலாமா? என வினவ, அடியேன், ''காசு கால்தூசுக்கு சமம்'' என்பதை உலகினர்க்கு அறிவிக்கவே இவ்வாறு காட்டியுள்ளனர் என விளக்கம் கூறினேன். எல்லோரும் உண்மையை உணர்ந்து பெருமிதமடைந்தார்கள்.

2.11.2001 வியாழனன்று, மணிகர்ணிகா கூட்டத்தில் ஸ்நானம் செய்வது மிகவும் விசேடம் எனக் கூறக் கேட்டு அங்குச் சென்று நீராடினோம். மஹா விஷ்ணு சக்கரத்தால் ஒரு திருக் குளத்தை உண்டாக்கி, அங்கு சிவனை நோக்கி தவம் செய்ததாக வரலாறு கூறினர். அத்தவத்தை ஏற்று சிவனே மெச்சிச் சிரக்கம்பம் செய்தார். அத்தருணத்தில், அவருடைய திருச் செவியில் இருந்த குண்டலத்தின் நாகமணி நழுவி குளத்தில் விழுந்தது. அதனால் இக்குளத்தை மணி கர்ணிகா என அழைக்கலாயினர் என அறியக்கேட்டேன். உடனே அவ்விடத்தில் ஸ்நானம் செய்தோம். அதன் பின்பு கங்கையும் மணிகர்ணிகாவில் கலந்ததால் மேலும் சிறப்பு பெற்றது என்றனர். இவ்விடத்தில் உச்சி வேளையில் தேவர்கள் நீராட வருவதாகவும் கூறியதைக் கேட்டு, நாங்களும் கடும் வெப்பத்தை தணிக்க முடியாது, தூய்மையான உள்ளத்தோடு உச்சி வேளையில் நீராடிவால், நாமும் தேவர்களாக மாறாவிட்டாலும், ''பெற்றலும் பிறந்தேன், இனி பிறவாத் தன்மை வந்து எய்தினேன்' எனும் தேவாரத்திற்கு ஏற்ப இறைவன் அருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டு நீராடினோம்.

3.11.01 அன்று துண்டி வினாயகரை தரிசித்து விட்டு காசியில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்களையும், காசிராஜா கோட்டையையும், சாரனாத் என்ற இடத்தையும், வாடகை காரில் சென்று கண்டோம். மேலும், காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கு எதிர் புறத்தில் சற்றுத்தள்ளி, மேற்கு நோக்கி வீற்றிருக்கும் விசாலாட்சியையும் தரிசனம் செய்தோம். அந்த சிறிய பாதையில், ஜன நெருக்கடியில் இவ்வாலயம் மிகவும் சிறிய கட்டிடத்தில் அமைந்துள்ளதைக் கண்டு வியந்தேன். மதவெறி கொண்ட வேற்று அரசர்களின் ஆட்சி நிகழ்ந்த காலத்தில் அச்சத்தினால் கீர்த்திவாய்ந்த மூர்த்திகளை ஆங்காங்கு அஞ்ஞாதவாசம் போல் ஒளித்தும், மறைத்து வைத்தும் வழிபட்ட காரணத்தினால் ஆங்காங்குள்ள சக்திவாய்ந்த மூர்த்திகளின் கோயில்கள் தென்னாட்டில் உள்ளது போன்று விசாலம் இன்றி, சுருங்கிய இடத்தில் அமைந்திருக்கிறார்கள்.

காசியில் 5 அதிசயங்கள் உள்ளதை கூறுவது இங்கு மிகவும் அவசியமாகும். 1. பிணம் நாறாது. 2. பூமணக்காது. 3. மாடுகள் முட்டாது. 4. பல்லி சொல்லாது. 5. கருடன் பறக்காது.

அன்று மாலை 6.30 மணி அளவில் விஸ்வ நாதர் கட்டத்தில் நிகழும் ஆர்த்தி பூஜையைக் காணும் பாக்யம் பெற்றோம். இது போன்று காட்சி இந்தியாவில் எங்கும் நிகழ்வதாக தெரியவில்லை. கங்கையின் கரையில் சுமார் 400 அல்லது 500 அகல் விளக்குகள் தொன்னை இலையில் இட்டு ஆற்றில் விட்டதும், வரிசையாக எரிந்து கொண்டு செல்வது, அனைத்து விளக்குகளும் எம்பெருமானையே சரணடைவது போல் தோன்றியது. இது காண வேண்டிய இறைக் காட்சியில் ஒன்று.

4.11.01 ஞாயிறு காலை கேதாரீஸ்வரரை தரிசித்து விட்டு, பேருந்து மூலம், விந்தியாசல வாஹினி என்னும் தலத்தை மதியம் 2.30 மணிக்கு அடைந்தோம். அங்கு சிறிய மேட்டுப்பாங்கில், பார்வதியின் அங்கத்திலிருந்து மூக்குபாகம் விழுந்ததாகவும், சக்தி பீடங்களில் ஒன்று எனவும் கேள்விப்பட்டு, ஆலயம் சென்று வணங்கி விட்டு, மறுபடியும் மற்றோர் பேருந்து மூலமாக அலகாபாத்துக்கு பிரயாணம் செய்து, இரவு 7 மணிக்கு நகரத்தார் சத்திரத்தில் தங்கினோம்.

மறுநாள் 5.11.01 அன்று திங்கள் காலையில், திரிவேணி சங்கமத்தில் ஸ்நானம் செய்ய, படகில் ஒரு ஆளுக்கு ரூ. 5/- வீதம் கொடுத்து, கங்கையும் யமுனையும் கலக்குமிடத்தில் ஸ்நானம் செய்தோம். அங்கு சரஸ்வதி நதி கண்ணுக்கு தெரியாமல் ஓடி அந்தர் வாஹினியாக ஊற்று எடுத்து வந்து கலப்பதாக அறிந்துகொண்டோம். பிறகு கரையில் உள்ள, காஞ்சிப் பெரியவர் நிறுவியுள்ள ஆலயத்தையும், அனுமார் ஆலயத்தையும் தரிசித்துவிட்டு, அன்று மாலை 6.30 மணி அளவில் இரயில் மூலமாக சித்ரகூடத்துக்கு புறப்பட்டோம்.

6.11.01 அன்று காலை, தனியார் Auto Rickshaw ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டு, காம்தாநாத் ஆலயத்தையும் மலையையும் (5 k.m. தூரம்) கிரிவலம் வந்து விட்டு, இங்குதான் பரதர் ராமரை சந்தித்தாக இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. அடுத்து பயஸ்வினி நதிக்கரையில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள ஜானகி குண்டம் அடைந்தோம். ஜானகி குண்டம்தான் ஜானகி குளித்த இடம்.

இதற்கு அருகில் உள்ள அகண்டபாறையின் மீதுதான் இராமபிரானும் சீதாப் பிராட்டியும் ஏகாந்த மாக அமர்ந்து இருந்தனர். அச் சமயம், காகம் ஒன்று சீதையின் தொடையைக் கொத்தி, பிறகு ஸ்ரீராமனின் அஸ்திரத்தால் ஒரு கண்ணை இழந்ததாக கேள்விப் பட்டேன். இங்கு ராமபிரானின் பாத சின்னம் தெரி வதைக் கண்டு, புளகாங்கிதமடைந்தேன். அடுத்து ஜடாயு தவம் செய்த ஆஸ்ரமமும், ஹனுமான் தாரா என்ற இடத்தையும் கண்டு வணங்கி விட்டு, அதற்கு மேல் பாகத்தில் சீதையின் சமையலறையும் பார்த்தோம்.

அடுத்து 14. k.m. தூரத்திலுள்ள அனுசூயா ஆஸ்ரமம் சென்றேன். இங்கு 3 சக்திகள் சோதிக்க எண்ணி, மும்மூர்த்திகளையும் அநுசுயாவிடம் அனுப்பி, நிர்வாணமாக வந்து உணவு ஊட்ட கேட்ட தும், மூவரையும் குழந்தைகளாக்கி, அநுசுயா உணவு ஊட்டியதையும், மேலும் நாரதர், இரும்புக்கடலை யைக் கொடுத்து வேகவைத்து வாங்கிய இடமும் கண்டேன். அடுத்து, 19 கி.மீ. தூரத்தி லுள்ள குப்த கோதவரி எனும் அருவி நீர் சுரந்து கொண்டிருக்கும் மலைக்குகைக்குச் சென்றேன். கையில் டார்ச்சு விளக் கின் உதவி கொண்டு தரிசித்தேன். அங்கு இடையில் ஒரு பெரிய பாறை உள்ளதையும், இங்கு, சீதை குளித்த இடம் மிகவும் மறைமுகமாக இயற்கையில் அமைந் திருந்ததையும் கண்டு வியந்தேன்.

இவைகள் யாவையும் காணக்காண, இந்த இடத்தைச்சித்ரகூடம் என கூறுவதைவிட விசித்ர கூடம் என்றே கூறினால் பிழை என்ன இருக்கப்போகிறது எனத் தோன்றியது.

7.11.01 அன்று மாலை சித்ரகூடத்திலிருந்து புகைவண்டி மூலமாக போபால் சென்றடைந்தோம். 8.11.01 காலை 6.30 மணிக்குச் சென்றடைந்ததும், அங்கிருந்து உஜ்ஜயினிக்கு புறப்பட இருக்கும் ரயிலில் புறப்பட்டு 11.30 மணி அளவில் சேர்ந்தோம், இந்த உஜ்ஜயினியே மகாபாரதத்தில் அவந்தி எனக் கூறப்பட் டுள்ளது. உடனேஷிப்ர நதியில் ஸ்நானம் செய்து விட்டு, மகாகாலேஸ்வரர் ஆலயத்திற்கு சென்றோம்.

ஆதிகாலப் பூகோள சாஸ்திரப்படி பூமியின் முதலாவது தீர்க்கரேகை, உஜ்ஜயினியில் மகாகாலேஸ் வரர் நிலை கொண்டுள்ள புள்ளியின் வழியாகத்தான் செல்கிறது. இதை வைத்துத்தான் காலக்கணக்கீடு செய்யப்பட்டது. பாரதத்தைப் பொறுத்தவரை உஜ்ஜ யினியில் உள்ள நேரத்தின் அடிப்படையில் தான் மணிப்பொழுது கணக்கிடப்பட்டது. அதாவது உஜ்ஜ யினிதான் பாரதத்தின் கிரீன்விச்சாக விளங்கி வந்தது. பழைய காலத்தில் பாரதம் ஞானத்திலும், கலாசாரத் திலும் மற்ற நாடுகளுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கியதால் மேற்காசிய நாடுகளும், கிழக்காசிய நாடுகளும் கூட உஜ்ஜயினி தீர்க்க ரேகையையே அடிப் படையாக ஏற்று, நேரக் கணக்கை அமைத்துக்கொண் டன. இதன் காரணமாகத் தான் உஜ்ஜயினியில்



சுயம்புவாக எழும்பிய ஜோதிர்லிங்கம் காலத்தின் சின்னமாக மகாகாலேஸ்வரர் என்ற பெயரில் வழி பாட்டுக்கு உரியதாயிற்று. இவைகளை எல்லாம் இறைவனே, மகாஞானேஸ்வரராக அடியேனுக்கு தோன்றியருள் புரிந்தான் என எண்ணியே பெருமித மடைந்தேன்.

அங்கிருந்து சென்று கபாலிகள் வழிபடும் காலபைரவர் கோயிலையும், விக்ரமாதித்தன் வழிபட்ட ஹர்சித்தி தேவியின் ஆலயமும் தரிசித்தோம். தட்சயக்ஞத்தின் போது சிவ பெருமான் வீசி எறிந்த தேவியின் விலா எலும்பு விழுந்த இடம்தான் ஹர்சித்தி தேவி ஆலயமாக இன்று விளங்குவதை தரிசித்தேன். கவி காளிதாசன் வழிபட்ட கர்காளிகா தேவியை ஊருக்கு வெளியே 2 மைல் தொலைவில் கண்டு, தரிசித்தோம். கண்ணபிரான் பிரம்மசாரியாக குருகுலவாசம் புரிந்த - சுதாமருடனும், பலராமருடனும் கல்வி பயின்ற சந்தீபனி மகரிஷியின் ஆஸ்ரமத்தையும் கண்டுகளித் தோம்.

பிறகு அன்றிரவு 9-மணி அளவில் போபா லுக்கு வந்து, இரவு தங்கிவிட்டு, மறு நாள் 9.11.01 காலை தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் புகைவண்டி மூலம் சென்னைக்குப் புறப்பட்டு 10.11.01 அன்று காலை இனிதே வந்தடைந்தோம். - இவ்வாறு வடநாட்டு யாத்திரை இறைவன் அருளால் இனிதே முடிவுற்றது.

***

தொன்மைக் கோலம்

- சேது. சிவா

தொன்மைக் கோலம் என்பது பழமையான திருவுரு ஆகும். திருமுறைகள், புராணம், சாத்திரங்கள் வழியாக அத்திருக்கோலத்தினை அறிந்து கொள்வதுடன், உலகியல் வாழ்க்கையில் அத்திருவுரு எவ்வெவ்வாறு தொடர்பு உடையதாக உள்ளது என்றும் அறிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

சைவசித்தாந்த சாத்திரங்களில் ஆணவம்; கன்மம்; மாயை என்கின்ற மூன்று மலங்கள் - குற்றங்கள் - மக்களைப் பற்றி உள்ளன என்றும்; இம் மூன்று மலங்களும் உள்ளவர்களைச் சகலர் என்றும்; மாயை நீங்க மற்ற இருமலங்கள் பொருந்தியவர்களைப் பிரளயாகலர் என்றும், ஆணவம் மட்டும் பொருந்தியவர்களை விஞ்ஞானாகலர் என்றும் பாகுபடுத்தி, இறைவன் சகலருக்குக் குருநாதர் வடிவில் படர்க்கையிலும், பிரளயாகலருக்குத் தடத்தத் திருமேனியில் முன்னிலையிலும், விஞ்ஞானகலருக்குத் தன்மையில் உள்நின்று உணர்த்தியும் மெய்யறிவினை - ஞானம் - புகட்டுவான் என்றும் கூறுகின்றன.

அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்து, கருவூலத்தில் பொன்னும், மணியும், பொருளும் எடுத்துக்கொண்டு வாதவூரர் கீழ்க்கடற்கரைக்குக் குதிரைகள் வாங்கச் செல்லும் வழியில், திருப்பெருந்துறையில் இறைவன் குருநாதர் வடிவில் எழுந்தருளி சகலர்நிலையில் இருந்த அவருக்குத் தம் அருள் நோக்காலும் (நயனதீட்சை), தம் திருக்கையினை அவரின் தலைமேல் வைத்தும் (பரிசதீட்சை) - தம் திருத்தாள்களை அவரின் தலையில் சூட்டியும் (திருவடி தீட்சை) அவரின் மாயை மலத்தினை அகற்றினார். அதனால் மெய்யறிவினை உணர்ந்து, பக்குவப்பட்டுப் பிரளயராகலர் நிலையில் இருந்த மாணிக்கவாசகருக்கு இறைவன் தம்தடத்தத் திருமேனி காட்சி கொடுத்தார்.

புலித்தோல் ஆடை ஒரு பகுதியிலும், பட்டாடை மற்றொரு பகுதியிலும்; ஆண்கள் அணியும் வளையமாகிய குழை ஒருகாதிலும், பெண்கள் அணியும் தோடு மற்றொரு காதிலும்; பால் போன்ற வெண்ணீறு ஒரு பாதியிலும், பசிய சந்தனப் பொட்டும் பசுமையான கிளியும் மற்றொரு பாதியிலும், ஒரு கையில் சூலாயுதமும், மற்றொரு கையில் வளையல்களும் உடைய பழமையான திருவுருவம் என்று தான் கண்டு களித்த திருமேனியைப் பாடுகின்றார்.

''தோலும் துகிலும்
குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும்; பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும்
உடைத் தொன்மைக் கோலமே''

சிவமும் சத்தியும் ஒருருவாகிய அம்மையப்பர் திருக்கோலம் தன் உள்ளத்தில் பதிந்துவிட, மாணிக்கவாசகர் தாம் பார்க்கும் அனைத்திலும் அத்திருக்காட்சியையே காண்கின்றார்.

குளத்தினைப் பார்க்கின்றார். அதில் கருங்குவளை மலரும் செந்தாமரைப் பூவும் ஒன்றாக இருக்கின்றன; பறவைகள் பாம்புகள் உள்ளன; உடல் அழுக்கினைப் போக்கும் மக்கள் இருக்கின்றனர். இது அவருக்குப் பிராட்டியும், பிரானும் இணைந்துள்ள தொன்மைக் கோலமாகத் தோன்றுகிறது.

பைங்குவளைக் கார்மலரால்
செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால்
பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார்
வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எம்
கோனும் போன்று இசைந்த பொங்கு மடு''

பசுமையான கரும் குவளைமலரின் நீலநிறம் அம்மையின் நிறத்தினையும், சிவந்த தாமரைப் பூவின் நிறம் ஐயனின் நிறத்தினையும், அங்குள்ள அழகிய பறவைகளின் கூட்டம் அம்மன் திருக்கையில் உள்ள கிளியையும்; பாம்புகள் இருப்பது பரமன் திருமேனியில் உள்ள பாம்பினையும்; உடல் அழுக்கினைப் போக்கும் மக்கள் இருப்பது, பிறப்பி னால் தம்மைப் பற்றி உள்ள மும்மலங்களை நீக்க இறைவன் திருமுன் வழிபடுபவர்களாகவும் அவர் மனதில் தோன்றி;

பிராட்டியும் பிரானும் இணைந்துள்ள குளம் என் கின்றார்.

(இத்திருவெம்பாவைப் பாடலுக்குப் பல வகைகளில் பொருள் கொள்ளப்படுகின்றது. 'அங்கம் குருகினத்தால்' என்பதற்கு அங்கு அழகிய நீர்ப் பறவைகளின் கூட்டம் என்றும்; அங்கம் - உறுப்பாகிய கை, குருகு - சங்க வளையல், இனம் - தொகுதி என்றும்; அம் கம் குருகின் நத்தான் என்று பிரித்து அங்கு தண்ணீரில் உள்ள சங்கு என்றும், சங்கினால் ஆகிய வளையல் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. வேறு முறையாக அம்மனுக்கும் அப்பனுக்கும் தனித் தனியாகக் குளத்தின் காட்சிகளை உவமை கூறுவ தாகவும் கூறப்படுகின்றது.

பிராட்டியும் பிரானும் இணைந்த திருமேனி யின் தோற்றமாகப் பாடப்பட்டிருப்பதனால், இப் பாடலுக்குப் பாடலின் அமைப்புப்படி நேர் பொருள் கொள்வதே நன்றாக இருக்கும்.

தொன்மைக் கோலம் நெஞ்சில் பதிந்துவிட்ட அவருக்கு, மலர்களின் நிறங்கள் பிராட்டி, பிரான் திருமேனி நிறங்களையும், குளத்தில் பல்வகைப் பறவைகள் - கொக்கு, நாரை, மீன்கொத்தி இருப்பது, அவருக்குத்தான் கண்டுகளித்த தொன்மைக் கோலத்தில் தெரிந்த பசுங்கிளியை நினைவூட்டுவதனாலும், பாம்புகள் இருப்பது பரமன் திருமேனியில் இருக்கும் பாம்பினை நினைந்தும், அழுக்கினைப் போக்க மக்கள் இருப்பது, இறைவன் திருமுன்பு பிறப்பினால் தத்தமக்கு ஏற்பட்ட மும்மலங்களையும் போக்கிக் கொள்ள வழிபடும் அன்பர்களாகவும் மனதில் தோன்றுவதனால் சத்தியும் சிவமும் இணைந்து தொன்மைக் கோலமாகக் காண்கின்றார் என்று நேர் பொருளும் கொள்ளலாம் அல்லவா?

மேகத்தினைப் பார்க்கின்றார். அது நீலநிறத்தில் திரண்டு, மின்னல் மின்னி, இடிஇடித்து, வானவில் அமைய, மழைபொழிய இருக்கும் நிலை, முறையே அம்மையின் திருமேனி நிறம், இடுப்பு, சிலம்பு ஒலி, உருவமாகவும்; தன்னை விட்டுப்பிரியாத இறைவ னின் அன்பர்களுக்கு அவள் அருள்பொழிவதைனப் போன்று மழை பொழிய வேண்டும் என்று பாடு கின்றார்.

முன்இக் கடலைச் சுருக்கி
எழுந்து உடை யாள்
என்னத் திகழ்ந்து எம்மை
ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்
பிராட்டி திருவடி மேல்
பொன்னம் சிலம்பில் சிலம்பித்
திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்
தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எம்கோமான்
அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு
முன்சுரக்கும்
இன்னருளே என்னப்
பொழியாய் மழை''

பாவை பாடிய வாயால் கோவை பாடும் மாணிக்கவாசகருக்குத் தன் நெஞ்சில் பதிந்துவிட்ட, சிவம்பாதி சக்திபாதி ஆகிய அத்தொன்மைக் கோலம் நினைவிற்கு வருகின்றது.

தம்மிடையே மிகுந்த அன்புகொண்டு உள்ளங் கள் ஒன்றுபட்ட தலைவனும் தலைவியும் உடன்

போக்காகச் சென்றுவிடுகின்றனர். தலைவியைக் காணாமல், தேடிச் சென்ற செவிலித்தாய் தன் எதிர் பட்டவர்களை வினவுகின்றாள். அதற்கு அவர்கள், 'அவன் காலில் அணிந்த வீரக் கழலும், அவள் அணிந் துள்ள சிலம்பும்; அவன் அணிந்துள்ள வெண்மை யான பட்டும், அவள் உடுத்தியுள்ள சிவந்த பட் டாடையும் ஒன்றாக விளங்கி, ஒரே உருவாகத் தோன்ற; எல்லாவற்றையும் உடையவனாகிய சத்தியுடன் ஒன்று பட்டுத் தோன்றும் பெரும்பற்றப் புலியூரன் ஆகிய சிவன் என்று நினைந்து, அத்தோற்றத்தினைத் தொழ நினைந் தோம்' என்று கூறுவதாகத் திருக்கோவையாரில் பாடுகின்றார்.

மின்னொத்து இடுகழல் நூபுரம்
வெள்ளை செம்பட்டு மின்ன
ஒன்று ஒத்திட உடையாளொடு
ஒன்றாம் புலியூரன் என்றே
நன்று ஒத்து எழிலைத் தொழ
உற்றனம்.''

தேவாரம் பாடிய மூவர் முதலிகள், சிவமும் சத்தியும் இணைந்து ஒருருவாய் இருப்பதனை மாணிக்க வாசகர் போன்று ஆண்பாதியின் தோற்றம், பெண் பாதியின் தோற்றம் என்று தனித்தனியாகச் சிறப் பித்துப் பாடாமல், பெண் பாதியை மட்டுமே வியந்து பாடி, அத்தன்மை உடையவன் பொருந்தியவன் என்று தான் பாடி உள்ளார்கள்.

திருப்பூந்தராய் இறைவனைப் பாடும்பொழுது, திருஞானசம்பந்தர், நீலோற்பமலர் போன்ற கரிய கண்கள், கொவ்வைப்பழம் போல் சிவந்த வாய், ஒளிவீசும் முத்துப்போன்ற பற்கள். இறகுகளை உடைய பெண் அன்னம் போலும்நடை, சுருண்ட மென்மையான கூந்தல் உடையவளை ஒருபாகமாக உடையவன் என்கின்றார்.

காவியம் கருங்கண்ணினாள் கனித்
தொண்டைவாய்க் கதிர்முத்த
நல் வெண் நகைத்
தூவியம் பெடை அன்னநடைச்
சுரிமென் குழலாள்
தேவியும் திருமேனி ஓர் பாகமாய்''

அவர், திருவலிவலம் உறைபவனைப் பாடும் பொழுது பூக்களால் பின்னப்பெற்ற கூந்தலையும், கட்டுகள் கூடிய வில்லைப் போன்ற நெற்றியையும், அம்பு போன்ற கண்களையும், பெண்மானின் மருட்சி யையும் உடையவள் பொருந்திய திருவுருவினை உடையவன் என்று பாடுகின்றார்.

பூஇயல் புரிகுழல் வரிசிலை
நிகர் நுதல்
ஏவுஇயல் கணைபிணை எதிர்
விழி உமையவள்
மேவிய திருவுரு உடையவன்'''

திருநாவுக்கரசர், திருச்சேறைச் செல்வனாரைப் பாடும்பொழுது, 'மிகுந்த செல்வம் உடைய இமய மலை அரசன்பெற்ற பார்வதி தம்மைப் பிரிந்து தவங்கள் செய்யவும், திருமணம் செய்து தம் திருமேனியில் ஒரு பாகமாக வைத்தவர்' என்று பாடுகின்றார்.

பெருந்திரு இமவான் பெற்ற
பெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் தவங்கள் செய்ய
மாமணம் புணர்ந்து மன்னும்
அரும்திரு மேனிதன்பால் அங்கு
ஒரு பாகமாகத்
திருந்திட வைத்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே

திருவதிகை வீரட்டானத்து அமுதைப்பாடும் பொழுது, கோவைப்பழம் போன்ற சிவந்த வாய், உடுக்கைபோலும் இடை, கடலைப்போன்ற பரந்த அல்குல், அழகிய வளையல் ஆகியவை உடைய வளைப் பாகமாகக் கொண்ட வீரட்டனாரே என்று பாடுகின்றார்.

தொண்டை கொப்பளித்த செவ்வாய்த்
துடியிடைப் பரவை அல்குல்
கொண்டை கொப்பளித்த கோதைக்
கோல்வளை பாகமாக''

இடப்பாகமாகிய பெண்பகுதியின் சிறப்பு களைக்கூறி அத்தன்மை உடையவளைத் தன் பாக மாகக் கொண்ட பரமன் என்று பாடும் திருநாவுக்கரசர், தான் தன் மனத்துள் கண்ட திருவுருவத்தின் வலது பாகமாகிய ஆண்பகுதியைப் பாடும்பொழுது; பொன் போன்ற மேனியில் திருநீறும், புலித்தோல் உடையும், இடுப்பின்மேல் பாம்பு அரைஞாணும், இராவணனை அழுத்திய திருவடியும், சிறிய கொன்றை மலர்மாலையும் கண்டேன் என்றும், மின்னலைப்

போன்ற சிறிய இடையை உடையவள் பொருந்திய பாகத்தினையும் கண்டேன் என்றும் பாடு கின்றார்.

பொன்ஒத்த மேனியில்
பொடியும கண்டேன்
புலித்தோல் உடை கண்டேன்
புணரத் தன்மேல்
மின்ஒத்த நுண்ணிடையாள்
பாகம் கண்டேன்
மிளிர்வது ஒரு பாம்பும்
அரைமேல் கண்டேன்
அன்னத்தேர் ஊர்ந்த
அரக்கன் தன்னை
அலற அடர்த்திட்ட
அடியும் கண்டேன்
சின்னமலர்க் கொன்றைக்
கண்ணி கண்டேன்
சிவனை நான்சிந்தை
உள் கண்டவாறே.

சுந்தரர், திருப்பூவணம் நாதரைப் பாடும் பொழுது, மின்னலைப் போலும் பெண்ணின் திரு வுருவைத் தன் திருமேனியில் ஒரு பாகமாக வைத்த சங்கரன் என்று பாடுகின்றார்.

மின்னனையாள் திருமேனி
விளங்க ஓர்
தன்னமர் பாகம் அது
ஆகிய சங்கரன்.

திருமூலநாயனார், பரசிவமும் பராசத்தியும் இணைந்து இருப்பதனைப் பல பாடல்களில் பாடி னாலும், ஒரே உருவில் ஒத்துநின்றதனைப் பாடு கின்றார்.

மருஒத்த மங்கையும் தானும் உடனே
உருஒத்து நின்றமை ஒன்றும் உணரார்

சேரமான் பெருமான் நாயனார், மாணிக்க வாசகரைப் போன்று தெளிவாகப் பாடுகின்றார்.

வலப்பாகத்தில் வீரக்கழல், பாம்பு, திருநீறு, தீ, எலும்புமாலை, சூலாயுதம், கங்கைச்சடை உள்ளன என்றும், இடப்பாகத்தில் பாடகமாகிய காலணி, கலம், சாந்துப்பொட்டு, பந்து, ஆடகம், சக்கரம், குளிர்ந்த கூந்தல் உள்ளன என்றும் அத்திருவுருவினைக் கூறுகின்றார்.

வலம்தான் கழல், இடம்பாடகம்
பாம்புவலம், இடமே
கலந்தான், வலம்நீறு, இடம்சாந்து
எரிவலம், பந்துஇடம், என்பு
அலந்தார்வலம், இடம் ஆடகம்
வேல்வலம், ஆழி இடம்
சலம்தாழ்சடை வலம், தண்ணங்
குழல்இடம் சங்கரற்கே.

சிவமும் சத்தியும் ஒருருவில் இணைந்து இருப்பதினைத் திருமுறைகள் இவ்வாறு பாட; சிவத்தின் திருமேனியின் இடப்பாகத்தினைச் சத்தி பெற்றதனை அருணாசல புராணம் விரித்துப் பாடு கின்றது.

கயிலாய மலையில் சிவபெருமானின் இரண்டு கண்களையும் விளையாட்டாகச் சத்தி தன் கைவிரல் களால் மூடிவிட்டாள். அதனால் அனைத்து அண்டங் களும் இருளில் மூழ்கிவிட்டன. பெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்து ஒளிகொடுத்தார்.

தான் இழைத்துவிட்ட அப்பெரிய குற்றத் திற்குக் கழுவாய்தேட, சத்தி காஞ்சிபுரத்தில் தவம் செய்கின்றார். அவளின் தவத்திற்கு மகிழ்ந்து இறைவன் காட்சி கொடுத்து, 'வேண்டிய வரம் யாது?' என்று கேட்கவும், அம்மை, 'சுவாமி! தங்களின் திருமேனி யின் பாதியில் என்னை ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்று கூறுகிறாள். நீ திருவண்ணாமலையில் தவம் இரு; அங்கு நீ விரும்பியபடி நம்முடலின் பாதியை உனக்கு அளிக்கின்றோம்' என்று கூறினார்.

திருவண்ணாமலையில் அம்மையின் தவத் திற்கு மகிழ்ந்து, பெருமான் காட்சி கொடுத்து, 'எம் பொருட்டு உன் உடலைத் துறந்து, இமயமலை அடைந்து தவம் இயற்றினை; இப்பொழுது எம் முடைய அரிய திருமேனியில் ஒரு பகுதியைக் கொடுப்பதே முறையாகும்; பெண்ணே! நமது இடப் பாகத்து இருப்பாய்' என்று மகிழ்ச்சியுடன் கையால் அணைக்கவும் இரு உருவும் உருகி ஒருருவானார்கள்.

அங்கம் யாவும் நம்பொருட்டு விட்டு
இமயவெற்பு அடைந்தாய்
இங்குநாம் உனக்கு ஒருபுறம்
அளிப்பதே இயற்கை
மங்கையே! நமது இடப்புறத்து
உறைஎன மகிழ்வுற்று
அங்கையால் அணைத்து அருளினன்
உருகி ஒன்றானார்.

அத்திருவுருவம் ஒருபகுதியில் சிவந்த சடை, மறுபகுதியில் கூந்தல்; ஒரு பாகத்தில் கொன்றை மாலை, மறுபாகத்தில் பூமாலை; ஒரு கையில் சூலாயுதம்; மற்றொரு கையில் நீலோற்ப மலர்; ஒரு காலில் வீரகண்டாமணி, மற்றொரு காலில் சிலம்பு; ஒரு பக்கம் பச்சை நிறம், மற்றொரு பக்கம் சிவப்பு நிறம்; ஒரு பக்கம் கச்சு கட்டிய தனம், மற்றொரு பக்கம் மார்பு; ஒன்று பயம் நீக்கும் கை, மற்றொன்று அடைக்கலம் அருளும் அழகிய கை, ஆக விருப்ப முடன் பொருந்தியதனைத் தேவர்கள் வழிபட்டார் களாம்.

அடுத்த செஞ்சடை ஒருபுறம்
ஒரு புறம் அளகம்
தொடுத்த கொன்றை ஓர்புறம்
ஒரு புறம் நறும் தொடையல்
வடித்த சூலம் ஓர்புறம்
ஒரு புறம் மலர்க்குவளை
திடத்தில் ஆர்கழல் ஒருபுறம்
ஒரு புறம் சிலம்பு
பச்சை வண்ணம் மற்றொருபுறம்
ஒருபுறம் பவளம்
கச்சுலா முலை ஒருபுறம்
ஒரு புறம் கவின்வார்
அச்சம் நீக்கிய வரதம் ஒன்று
அபயம் ஒன்று அங்கை
இச்சையாம் இவருதல் கண்டு
இறைஞ்சினார் இமையோர்.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினில் முதலாவதாகிய திருவுந்தியார், சிவன் தம்முள் ஒருமைப்பட்டு அடங்கி இருக்கும் சத்தியை எழுப்பிப் படைப்புத் தொழிலைச் செய்கின்றான் என்று பாடுகின்றது.

கிடந்த கிழவியைக் கிள்ள எழுப்பி
உடந்தை யுடனே நின்று உந்தீபற
உன்னையே கண்டது என்று உந்தீபற

இரண்டாவது சாத்திரமாகிய திருக்களிற்றுப் படியார், சத்தியும் சிவமும் உலகுக்குத்தாய் தந்தையர் ஆவர் என்றும், சத்தியுடன் நன்றாகவும், ஒரு கூறாக வும், எதிலும் சிவம் முன் நிற்பார் என்றும் பாடு கின்றது.

அம்மை அப்பரே உலகுக்கு
அம்மை அப்பர் என்றறிக
அம்மை அப்பர் அப்பரிசே
வந்து அளிப்பார்.
தாரத்தோடு ஒன்றாவார்
தாரத்து ஓர் கூறாவார்
தாரத்தோடு எங்கும்
தலை நிற்பார்.

மெய்கண்ட தேவர் அருளிய சிவஞான போதத் தின் வழிநூலாகிய சிவஞான சித்தியார், 'சிவபெரு மானைத் தேவர்களில் ஒருவன் என்று கூறுவர்; அவன் அரி, அயன், உருத்திரன் மூவருக்கும் முதல்வ னாக இருப்பதனையும், உணரமாட்டார்; அவனின் முதலாவது திருமேனி பாதி பெண்ணாக இருப்பதனை யும் உணரமாட்டார்கள்; திருமால், பிரமன் ஆகிய இருவரும் அறியமுடியாத திருவுருவினை உடைய வன் என்பதனையும் தெரியமாட்டார்கள்; அவன் திருமேனியின் தன்மையினையும் தெளியமாட்டார் கள்' என்று பாடுகின்றது.

தேவரின் ஒருவன் என்பர்
திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்றது ஓரார்
முதல் உருப்பாதி மாதர்
ஆவதும் உணரார் ஆதிஅரி
அயற்கு அறிய ஒண்ணா
மேவுரு நிலையும் ஓரார்
அவனுரு விளைவும் ஓரார்.

மேலும் அந்நூல், இறைவன், சத்தியும் சிவமும் என்று தம்மிடம் இருவேறு வகைப்பட்ட தன்மைகள் உடையவனாய் இருப்பதனால்தான் தன்னில் விரிந்த தன்மைக்கு(வியாபகம்) உட்பட்ட பல்வகை உயிர் களும் அவ்வப் பிறப்பிற்கு ஏற்ப குணங்களையும் உடையவனாய்த் தம்முள் கூடிக்களித்து வாழும்படி அமைத்தான் என்று பாடுகின்றது.

சத்தியும் சிவமும் ஆயதன்மை
இவ்வுலகம் எல்லாம்
ஒத்து ஒவ்வா ஆணும் பெண்ணும்
உணர் குண குணியுமாகி
வைத்தனன் அவளால் வந்த
ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்
லிங்கத்தின் அறியார் பீட
லிங்கத்தின் இயல்பும் ஓரார்.

போற்றிப் பஃறொடை என்கின்ற மற்றொரு சித்தாந்த நூல், ஒளிமிக்க நீல கண்டத்தினை உடைய வனின் இடதுபாதியில் எப்பொழுதும் பசுமைநிறம் உள்ளது என்று சத்தி சிவத்தோடு ஒன்றி இருப் பதனைப் பாடுகின்றது.

சோதி மணிமிடற்றுச் சுந்தரமும்
பாதியாம் பச்சை இடமும்.

இனி, உலகியலில் அத்தொன்மைக் கோலத்தின் அருளாற்றல், தன் விரிந்த தன்மைக்கு உட்பட்ட மானிடர், விலங்குகள், தாவரங்கள் ஆகிய அனைத்து உயிரினங்களிலும் எவ்வெவ்வாறு பொருந்தியனவாக இருக்கின்றன என்பதனைப் பார்ப்போம்.

நடைமுறை வாழ்க்கையில் காரணத்தை அறிந்தோ, அறியாமலோ, மணமகளை மணமகனின் வலத்தில் இருக்கச்செய்து, திருப்பூட்டியபின்பு அவளை அவனின் இடதுபக்கம் இருக்கச் செய்கின்றனர். அன்றிலிருந்து அவள், அவனின் இடப்பக்கம்தான் என்றென்றும் இருக்கவேண்டும். இறைவன் சத்தியை இடப்பாகத்தில் வைத்துள்ளதனை மக்களுக்கு அறிவுறுத்துவதற்காகவே இவ்வாறு செய்கின்றனர் போலும்.

மக்களாகப் பிறந்துள்ள ஒவ்வொருவரின் வலப்பாகம் ஆண்பாகமாகவும், இடப்பாகம் பெண் பாகமாகவும் உள்ளது. அதனாலேயே ஆண்களுக்கு வலது கை, கால் வலிமை உடையவனவாக உள்ளன. ஆணின் இடப்பாகம் வலப்பாகத்தினைக் காட்டிலும் வலிமை குறைந்ததாகவே உள்ளது. இதனை உணர்ந்தே முன்னோர்கள், ஆணுக்கு வலதுபக்கம் நோய் ஏற்பட்டால் விரைவில் குணமாகிவிடும் என்றும்; வலது கண் துடித்தால் நல்லது நடக்கும் என்றும் கூறிஉள்ளார்கள். ஆண்களின் இடது கைப் பழக்கம் உடையவர்கள் நற்பேறு உடையவர்களாகத் தம்துறையில் சிறந்து விளங்குகின்றதன் காரணத்தை ஆராய்ந்து பார்த்தால், சத்தியின் பாகமாகிய இடப்பக்கம் அவளின் அருள் அதிகமாகவே உள்ளதனால் தான் என்பது தெளிவாகும்.

பெண்களுக்கு இடப்பாகம் வலப்பாகத்தினைக் காட்டிலும் வலிமை உடையதாகவும், சற்றுப் பெருத்தும் இருக்கும். அதன் காரணமாகத் தான், தண்ணீர் சுமக்கும் பெண்கள் தம்இடது இடுப்பில் தண்ணீர் பானைகளைச் சுமந்து வருகின்றார்கள். உடல்வெப்பமும், அதிகக்குளிர்ச்சியும் தாக்காமல் பாதுகாப்பதற்காகவே, மேற்சட்டை அறிமுகம் இல்லாதபொழுது ஆண்கள் துண்டினை இடது தோளில் போட்டு, இருதயம்வரை இறக்கிவிட்டார்கள். இதில் மற்றொரு உண்மையும் உண்டு. ஒவ்வொரு ஆணின் இடப்பாகமாகிய பெண்பாகத்தில் இருக்கும் நகிலை மறைக்க அத்துண்டு மாராப்புத் துணியாகவும் அமையும்.

மிருகங்களில் சிங்கம் ஆண். அது தான் அறைந்து கொல்லும் இரை தன் வலப்பக்கம் (ஆண்பக்கம்) விழுந்தால்தான் அதனை உண்ணும். இடப்பக்கம் விழுந்தால் உண்ணாது விட்டுச் சென்று விடும்.

ஒரே மூலிகையில் ஆண்பெண் என்று உண்டு. ஆண்களுக்கு நோய் ஏற்பட்டால் ஆண்மூலிகையும், பெண்களுக்குப் பெண்மூலிகையும் கொடுத்தால் நோய் குணமாகும். இதனைச் சிறந்த சித்த வைத்தியர்கள் அறிவர். ஒரேகொடியில் துளிர்த்து வரும் வெற்றிலைகளில் ஆண்பெண் என்கின்ற வித்தியாசம் உண்டு. அதிகமாக வெற்றிலைகளில் புழங்குபவர்கள் இதனை அறிவார்கள்.

கொடி, செடி மரங்களில் பூக்கும் அனைத்துப் பூக்களும் காய் காய்ப்பது இல்லை. பூக்களில் ஆண் பெண் உண்டு. ஆண்பூக்களின் மகரந்தப்பொடி, காற்று, புழு, பூச்சி வண்டு முதலியவற்றின் மூலமாகப் பெண் பூக்களின் மகரந்தத்துடன் சேரவும், அப்பூ கருக்கொண்டு காய் காய்க்கின்றது.

மாணிக்கவாசகர் கண்டுகளித்த தொன்மைக் கோலமாகச் சிவமும் சத்தியும் இணைந்த தன்மையை, அனைத்து உயிரினங்களையும் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு உயிரிலும் அந்த இரு குணங்களும் பிரதிபலிப்பதனை அறிந்து; தில்லைக் கூத்தனாகிய இறைவன் பெண்ணைப் பாதியாக வைத்துக் கொள்ளாவிடில் இப்பூமியில் உள்ள உயிரினங்கள் இறந்துவிடும் என்று அவர் பாடிய பாடலின் உண்மையை அறிந்துகொள்ள முடியும்.

தென்பால் உகந்து ஆடும்
தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்
பித்தன் காண் ஏடீ!
பெண்பால் உகந்து இலனேல்
பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகு எய்தி
வீடுவர் காண் சாழலோ.

★★★

சத்தியம் தவறாத உத்தமர் – நம்பாடுவார் அருள் வரலாறு

– புலவர் ஏ. பரந்தாமன், எம்.ஏ., பிளிட்.

திருமால் உவந்து அர்ச்சாவதார மூர்த்தியாக எழுந்தருளிய திவ்யத் திருப்பதிகள் நூற்றெட்டினுள், திருநெல்வேலி மாவட்டத்தில் வானமாமலை எனும் நாங்குனேரிக்கு அருகே பொதிய மலைச் சாரலில் அமைந்த திருக்குறுங்குடியும் ஒன்றாகும். இயற்கை அழகு மிகுந்த இத்திருப்பதி வைணவத்தின் தெற்கு வாசல் எனப்படுகிறது. இங்கு எழுந்தருளிய பெருமாள் வைஷ்ணவ நம்பி என்று வழங்கப்படுகிறார். சிஷ்யன் இருக்க வேண்டிய நிலையை நாட்டு மக்கட்கு அறிவிக்கும் பொருட்டு, தானே சிஷ்யனாக இருந்து, இராமாநுசரை குருவாக்கி அவரிடம் பாடம் கேட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்திருப்பதியில் கைசிக ஏகாதசித் திருநாள் சிறப்பு வாய்ந்ததாகும். இந்நன்னாள் நம்பாடுவார் என்ற பக்தரின் வரலாற்றைக் குறிப்பதாகும்.

இத்திருக்குறுங்குடியை அடுத்த முனிக் கிராமம் என்னும் ஊரில் பாணர் குலத்தில் நம்பியப்பா என்பவர் பிறந்தார். இளமை முதலே திருமாலிடம் பக்திபூண்டு பக்திப்பாடல்களை இனிய இசையில் பாடி வந்தார். இவரது யாழினிசையில் திருமால் தனது உள்ளத்தையே பறி கொடுத்தார். ஒவ்வொரு மாதமும் ஏகாதசி தினத்தன்று விரதமிருந்து, திருக்குறுங்குடி நம்பியைக் கை தொழுது, கைசிகப் பண்ணினால், அவரது புகழ்பாடிப் போற்றி மகிழ்ந்து வந்தார். திருக்குறுங்குடி நம்பியைப் பாடியதால் ''நம் பாடுவார்'' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். திருக்குறுங்குடி நம்பி நம்பாடுவாருக்குத் தரிசனம் கொடுக்க விரும்பித் தம் எதிரேயிருந்த கருடாழ்வாரைச் சற்றே விலகியிருக்க ஆணையிட்டு, தரிசனம் கொடுத்தார். எம்பெருமான் தரிசனம் கண்டு மகிழ்ந்தார் நம்பாடுவார்.

ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதம் வளர்பிறையில் ஏகாதசியன்று விரதமிருந்து, திருக்குறுங்குடிச் சென்று, அவர் புகழை இனிய கௌசிகப் பண்ணால் பாடி, தரிசித்து விரதம் முடித்து வந்தார். ஒரு வருடம் இந்த கார்த்திகை ஏகாதசி அன்று முனிக் கிராமத்திலிருந்து, யாழினை, இசைத்துக் கொண்டே புறப்பட்டார். தன்னை மறந்து பாடிக்கொண்டே வழிதவறி ஒரு காட்டு வழியே சென்று விட்டார். அந்தக் காட்டில் ஓர் பெரிய ஆலமரத்தில் பிரம்ம ராட்சசன் ஒருவன் வசித்து வந்தான். அவனுக்குப் பத்து நாட்களாக எந்த உணவும் கிடைக்காமல் கொடிய பசியுடன் இருந்தான். அத்தருணத்தில் நம்பாடுவார் வருவதைக் கண்ட பிரம்ம ராட்சசன் நம்பாடுவாரை உண்ண விரும்பி வழி மறித்தான்.

''வானளாவி ஒளிர் பொதிய மாமலையில் வாசமாக
இருந்த அவ்வன
ஏனமா புலி விலங்கினங்களை எடுத்து உண்ணும்
பிரம்ம ராட்சசன்
ஊனுடல் மிகப் பெருத்து இருண்டவனன்று
உணவிலாவது அலைந்து உலாவியே
கான வீணையோடு பாடியே வரும் நம்பாடுவாரை
எதிர் கண்டனன்.''

அவனது கொடூரமான உருவைக்கண்ட நம்பாடுவார் நடுநடுங்கினார். அவனிடமிருந்து தன்னைக் காப்பாற்ற திருக்குறுங்குடி நம்பியைச் சரணடைந்தார். பின்பு மனம் தேறினார். தனது உடல் என்றாகிலும் ஒருநாள் மண்ணுக்கு இரையாகப் போவதை நினைத்தார். அதைவிட இந்த ராட்சசன் பசியைப் போக்க உணவாவது நல்லது என்று நினைத்தார். இராட்சசனை நோக்கி, நான் ஒவ்வொரு ஏகாதசியன்றும் விரதம் இருந்து வருகின்றேன். இன்று ஏகாதசி தினமாதலால் நான் சென்று குறுங்குடி நம்பியை தரிசித்து, விரதம் முடித்து, விடிவதற்குள் வந்து உனக்கு உணவாவேன். நீ என்னைப் போக அனுமதி என்று வேண்டினார் நம்பாடுவார்.

இதைக் கேட்ட ராட்சசன் கொடூரமாகச் சிரித்தான். நம்பாடுவாரை நோக்கி, "அட பைத்தியக்காரா! யாராவது கொடிய பசிக்குக் கிடைத்த உணவை விட்டு விடுவார்களா? அப்படியே விட்டாலும் தப்பிப் பிழைத்ததும் மீண்டும் தானாக வந்து அகப்பட்டுக் கொள்ளுமா? திருமாலடியவனாகிய நீ, தப்பிப் பிழைக்க இப்படி ஒரு பொய்யைச் சொல்லலாமா? உன்னை விடமாட்டேன். இப்போதே புசிக்கிறேன் பார்" என்று நம்பாடுவாரை நெருங்கினான்.

நம்பாடுவானும் - பிரம்ம ராட்சசனும்

நம்பாடுவார் ராட்சசனை நோக்கி, நீ சொல்வது போல எல்லோரும் பொய்யர்களாக இருக்க மாட்டார்கள், ஞானிகளும் திருமால் அடியார்களும் ''சத்தியம் தவறாத உத்தமர்கள்'' ஆவார். அவர்களைப் போல நானும் சொன்ன சொல்லை மீற மாட்டேன். அப்படி நான் தவறினால் எம்பெருமான் என்னைத் தண்டிப்பான். அப்படி நான் திரும்பி வந்து உனக்கு உணவாகாமல் போனால் கீழே சொல்லும் பாபங்களுக்கு ஆளாவேன் என்றான்.

1. இறைவன் அடியவர்கள் பசித்திருக்க தான் மட்டும் உண்பவன்
2. இறைவனையும், அடியார்களையும் பழிப்பவன்.
3. கொலை, களவு போன்ற ஐம்பெரும் பாவங்களைச் செய்தவன்.
4. பெற்றோரைக் காப்பாற்றாதவன்.
5. உயிர்களிடத்தில் அன்பு காட்டாதவன்
6. தர்மம் செய்பவர்களைத் தடுப்பவன்.
7. திருமாலை முதல் தெய்வமென நம்பாதவன்.
8. தன்னை அடுத்தவர்களைக் கெடுத்தவன்
9. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்தவன்
10. குருவுக்குத் துரோகம் செய்தவன்.
11. கன்றுக்குப் பாலை விடாது கறப்பவன்.
12. சகோதரத் துரோகம் செய்தவன்.

இப்படி 108 பாபங்களைச் சொல்லி அவற்றால் வரும் தீமைகளுக்கு ஆளாவேன் என்று சத்தியம் செய்தார் நம்பாடுவார். இதைக் கேட்ட ராட்சசன் பெரு வியப்பு அடைந்தான். நம்பாடுவார் உண்மையான திருமால் அடியவர், சொன்ன சொல் தவற மாட்டார் என்று நம்பி கோயிலுக்குச் சென்று வர அனுமதித்தான்.

விடை பெற்ற நம்பாடுவார் நள்ளிரவு ஆகிவிட்டதால் ஓட்டமும் நடையுமாகத் திருக்குறுங்குடி நம்பியை சேவிக்கச் சென்றார். அதற்குள் பெருமாள் வீதி புறப்பாடு முடிந்து கோயிலில் எழுந்தருளியிருந்தார். அந்தணர்கள் பிரபந்தச் சேவையும், சாற்று மறையும் செய்து கொண்டிருந்தனர். நம்பாடுவார் வீணையை மீட்டி, கைசிகப் பண்ணால் எம்பெருமானைப் பாடி, சேவித்தார். பிரசாதம் பெற்று விரதத்தை முடித்துத் திரும்பினார். இதற்குள் பின் இரவு ஆயிற்று. கீழ்வானம் வெளுக்கத் தொடங்கியது. உடனே பிரம்மராட்சசன் நினைவு வந்தது. தான் செய்த சத்தியத்தைக் காக்க, ராட்சசனுக்கு உணவாகப் புறப்பட்டு வேகமாக நடந்தார்.

இதைக்கண்ட குறுங்குடி எம்பெருமான் நம்பாடுவாரைச் சோதிக்க ஓர் அந்தண வேடம் தாங்கி நம்பாடுவாரை வழி மறித்தார். நம்பாடுவாரை நோக்கி, ''நீர் ஏன் இவ்வளவு வேகமாகச் செல்கின்றீர்? ஏதாவது திருடிவிட்டு ஓடுகின்றீரா? நில்லும்'' என்றார். நம்பாடுவார் அந்தணரை நோக்கி, ''நான் ஒரு ராட்சசனுக்கு உணவாவதாகச் சத்தியம் செய்துள்ளேன். விடிவதற்குள் செல்ல வேண்டும். என்னை வழிமறிக்காதீர்'' என்று வேண்டினார். அந்தணராக வந்தவர் நம்பாடுவாரை நோக்கி, ''தப்பி வந்தவன்'' மீண்டும் தானாகச் சென்று ராட்சசனுக்கு உணவாகி உயிரை விடுவானா? அதை விட்டு திரும்பச் சென்று குறுங்குடி நம்பியைப் பாடிப்

பரவசப் படுத்தும் என்றார். அதற்கு நம்பாடுவார் ''நான் சத்தியம் தவறினால் எம்பெருமான் அருளுக்குப் பாத்திரனாகமாட்டேன்'' எனவே என்னைப் போக விடும் என்று கெஞ்சினார். எப்படித் தடுத்தும் நிற்காத நம்பாடுவாரைப் போகவிட்டார்; சிறிது தூரம் சென்ற நம்பாடுவார், திரும்பிப் பார்த்தார். அந்தணரைக் காண வில்லை. அந்தணராக வந்தவர் குறுங்குடி நம்பியே என்று அறிந்து மகிழ்ந்தார்.

பொழுது விடிந்து விட்டதால் ஓட்டமும், நடையுமாகச் சென்று, பிரம்ம ராட்சசனை நெருங்கி னார். நம்பாடுவார் சொன்ன சொல் தவறாமல், குறிப் பிட்ட நேரத்தில் தமக்கு உணவாக வந்ததைக் கண்ட ராட்சசன் வியப்படைந்தான். இவரன்றோ உத்தமர், சொன்ன சொல் தவறாதவர், **''சத்தியம் தவறாத உத்தமர்''** இவரை நாம் உண்டால் தீராத பாபமும், பழியும் அடைவோம் என்று எண்ணினான். இதற்குள் நம்பாடுவார் தன்னை உண்டு பசியைப் போக்கிக் கொள்ளும்படி வேண்டினார். அதற்கு ராட்சசன் நம்பாடு வாரை நோக்கி, ''நான் சத்தியம் தவறாத உத்தம னாகிய உன்னைப் புசித்தால் பெரும் பாபத்திற்கு ஆளாவேன். எனவே உம்மை உண்ணமாட்டேன்'' என்றான். அதற்கு பதிலாக ''உன் விரத பலனை நீ எனக்கு அளித்தால் என் பசி தீரும். என் சாபம் நீங்கி உய்வேன்'' என்றார்.

ஆனால் நம்பாடுவாரோ விரத பலனைத் தர மறுத்து, தன்னை உண்ணும்படி வேண்டினார். நீண்ட நேர வாதத்திற்குப் பின் நம்பாடுவார் விரத பலனைக் கொடுத்து பிரம்ம ராட்சசன் பசியைப் போக்கினார். உடனே பிரம்ம ராட்சசன் உருவம் மாறி அழகிய பிராமணனாகத் தோற்றமளித்தான்.

இதைக் கண்ட நம்பாடுவார் அதிசயித்து, அந்தணரின் வரலாற்றைக் கேட்டார். அந்தணர் நம்பாடுவாரை வணங்கி, அவருக்கு நன்றி கூறினார். முற்பிறப்பில் சௌந்திரபாண்டியன் என்ற அரசன் திருமாலின் மீது மிகுந்த பக்திகொண்டு, மோட்ச யாகம் செய்தான். அவனது குரு யாகத்தை நடத்தினார். தான் என்ற அகந்தையால் மந்திரங்களையும், யாகச் செயல் களையும் மறந்தார். எனவே வேள்வி முற்றுப்பெற வில்லை. குருவான நானே மந்திராலோபம், கிரியா லோபம் என்ற இரு பாவங்களால் பிரம்ம ராட்சச னாகப் பிறந்தேன். வேள்வியை முடிக்காத காரணத்தி னால் இருந்த நீரே இப்போது நம்பாடுவாராகப் பிறந்துள்ளீர். இப்போது உமது கருணையால் யான் என் சாபம் நீங்கி முன்போல் அந்தணனாக மாறினேன் என்றான் பிரம்மராட்சசன்.

இருவரும் மகிழ்ந்து குறைபட்ட யாகத்தைச் செவ்வனே குறைவின்றி நடத்தி முடித்தனர். வேள்வி முற்றுப்பெறவே ஸ்ரீமந் நாராயணன் கருட வாகனத்தில் திருமகளோடு காட்சி தந்தார். இருவரும் எம் பெருமானை தரிசித்து மகிழ்ந்து நின்றனர். திருமால் அந்தணரான பிரம்ம ராட்சசனுக்கு மட்டும் பரம பதம் தந்தருளினார். நம்பாடுவாரை நோக்கி, ''நீர் இன்னும் சில காலம் உயிரோடிருந்து, குறுங்குடி நம்பியை கைசிகப் பண்ணால் பாடி, மகிழ்வித்து பின்னர் பரம பதம் வந்து சேரும், என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

திருமாலின் மறைவைக் கண்ட நம்பாடுவார் தாயை இழந்த குழந்தையைப் போல் கதறினார். பின்பு தேறினார். சில காலம் குறுங்குடி நம்பியைப் பாடி மகிழ்வித்து வந்தார். பின்னர் **''பரமபத தாகம்''** தோன்றியது.

''கூவிக்கொள்ளும் காலம் குறுகாதோ
குறுங்குடி பெருந்தகாய்''

என மனமுருகிப் பாடினார். ஒரு கைசிக ஏகாதசி அன்று நம்பாடுவார் குறுங்குடி நம்பியை, இனிமையான கைசிகப் பண்ணால்பாடி மகிழ்வித்து, கோயிலின் முன் விழுந்து வணங்கியபடியே தன் மேனியை விட்டு, சோதியாகக் கிளம்பி திருநாடு அலங்கரித்தார்.

திருக்குறுங் குடியில் ஒவ்வோராண்டும் இந்த கைசிக ஏகாதசி நன்னாள் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. நம்பாடுவார் வரலாறு நாடகமாக நடத்தப் படுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நம்பாடுவார் வரலாற்றால் நாம் கீழ்க்காணும் அறங்களை உணரு கின்றோம்.

1. திருமாலடியவர்களிடையே சாதிமத பேதம் காணக் கூடாது. அனைவரும் அடியவர் குலமே என்று கருதவேண்டும்.
2. திருமாலடியவர்கள் ''சத்தியம் தவறாத உத்தமர்'' களாக விளங்க வேண்டும்.
3. யான், எனது என்னும் அகம்பாவம் கொள்ளக் கூடாது
4. குலச்செருக்கு, கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு என்னும் மூன்று செருக்குகளையும் நீக்கிக் கொள்ள வேண்டும்.
5. கருணையுடன் பிறர் துயரத்தை உடனே துடைக்க வேண்டும்.
6. ஸ்ரீமந் நாராயணனை ஆழ்ந்த பக்தியுடன் வணங்க வேண்டும்.

இதுபோன்ற நல்லறங்களைப் பின் பற்றினால் நாமும் பரம பதம் அடைவோம் என்பது ''உள்ளங் கை நெல்லிக்கனி'' ஆகும். நாமும் நம்பாடுவார் போன்று சிறந்த திருமாலடியாராக விளங்கி, திரு நாடு அடைவோமாக!

வாழ்க நம்பாடுவார் புகழ்!

பக்தனுடன் பரந்தாமன்

- எஸ். கோவிந்தராஜ பட்டாச்சாரியார்,
ஒப்பிலியப்பன் கோயில்

கணிகண்ணன் என்பவரும் திருமழிசை ஆழ்வாரும் திருமாலுடைய பக்தர்கள். இவர்கள், இருந்த இடத்திலே, ஒரு மூதாட்டியார் தொண்டு செய்து வந்தார். அந்த மூதாட்டியின் பக்தியை மெச்சி, அவர் நிலை கருதி, ''இளமையும், சக்தியும் பெறுவாய்'' என்று ஆசீர்வதிக்க, அதன் பலனாக இறைவன் தொண்டு செய்ய அம்மூதாட்டி இளமை பெற்றாள்.

அதை அறிந்த பல்லவராய மன்னன், தனக்கும், அப்படியே அருள வேண்டினான். கணிகண்ணன் மறுத்திடவே, அரசன் கணிகண்ணனை 'இந்' நாட்டை விட்டு போய்விட ஆணையிட்டான். ஆழ்வாரும் புறப்படலானார்.

''ஸ்ரீ யதோக்தகாரி பெருமானே, திருவெஃகாவில் எழுந்தருளி உள்ளவரே, தாங்களும், எங்களுடன் எழுந்தருளுக'' என்றார் திருமழிசை ஆழ்வார்.

பாடல் :

கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்கா வேண்டா - துணிவுடைய
செந்நாப்புலவனும் போகின்றேன் - நீயும் உன்தன்
பைந்நாகப்பாய் சுருட்டிக் கொள்.

சயன கோலத்தில் இருந்த பெருமாள், பரிவார தேவதைகள் எல்லாம் ஆழ்வாருடன் சென்று விட்டார்கள்.

தேசம் இருள் ஆழ்ந்தது அரசன் பயந்து தவறை உணர்ந்து 'ஓரிருக்கை' என்ற ஊரிலே அவர்களைக் கண்டு வணங்கி, தன்னை மன்னித்து தன் நாடு வர வேண்டினான்.

கணிகண்ணன் ஒப்புக்கொண்டு திருமழிசை ஆழ்வாரிடம் சொல்ல,

ஆழ்வார் எம்பெருமானிடம், மீண்டும் திரும்பி வரும்படி வேண்டினார்.

கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி
மணிவண்ணா, நீ கிடக்க வேண்டும் - துணிவுடைய
செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன் நீயும் உன்தன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள் - என்றார்.

திருக்குடந்தை (கும்பகோணம்) வந்த ஆழ்வார், கிடந்தவாறு எழுந்திருந்து பேசு, என்று அமுதனிடம் வேண்டினார். ஆகவே, அர்த்த சயனம் கொண்டு கும்பகோணத்தில் ஸ்ரீ ஆராவமுதன் எழுந்தருளி உள்ளார்.

★ ★ ★

அருள்மிகு சின்னக்குமாரர்
பழனி மலைக்கோயில் உற்சவர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை தலைமையிடத்தில் மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. ராமசாமி அவர்கள் தலைமையில், சென்னை இணை ஆணையாளர் மண்டல செயல் அலுவலர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பணி சீராய்வுக் கூட்டம் 26-11-2001 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு பி.ஏ. ராமையா இ.ஆ.ப. அவர்களும், அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களும், கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகையா பி.எஸ்.சி. பி.எல். அவர்களும், இணை ஆணையாளர் (தலைமையிடம்) திருமிகு ப. தனபால் எம்.ஏ. பி.எல். அவர்களும் இவ்வாய்வுக் கூட்டத்தில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,*** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.